RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 26 ஆகஸ்ட் 2022 இதழ்:- 18

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## யாழ்ப்பாணத்திற்கு "ஹிந்தி" தேவையா! எதற்காக யாழ்.இந்துவைத் தெரிவு செய்தார்கள்?



கடந்த அண்மை நாட்களாக யாழ்ப்பாணத்தில் ஹிந்தி மொழி கற்பது பற்றிய வாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதரவாக ஒரு தரப்பினரும், எதிராக இன்னொரு தரப்பினரும் என சமூக வலை தளங்கள்களை கட்டிக் கொண்டிருக்கின்றன.

இப்படியொரு வேலைத் திட்டத்தை வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் மேற் கொண்டால் அது எப்படியான எதிர்வினைகளைத் தோற்றுவிக்கும்?, அது வெற்றியளிக்குமா? தோல்வியளிக்குமா? என்கிற மதிப்பீடுகளுக்குப் பதில் தரும் வகையில் இந்த வாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. (8ம் பக்கம் பார்க்க)

## மக்களால் தெரிவான ஜனாதிபதியாக ரணில் வகுத்து வரும் உபாயங்கள்!



நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதவி காலத்தை பூர்த்தி செய்து அடுத்த பதவி காலத்திற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வருவதற்கு தேவையான வியூகங்களை வகுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளார். (9ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்காவுக்கு கடுமையான நிபந்தனைகளுடன் டொலர்களை வழங்க தயாராகும் தமிழர் பேரவை?



## தமிழ் புலம்பெயர் சமூகத்தின் இன்றைய நிலை என்ன?

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence / Morningside

**Scarborough** $508,000
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


### Sheppard & Warden


**Oshawa** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Fully Renovated Suite

### Kennedy /Progress

**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Hurontario/Hillcrest

**Mississauga** $599,900
Bedrooms: 2+1 Washrooms: 1
Renovated Washroom

### 40 New Delhi Dr

**Markham** $599,999
2 Floor Commercial Unit With 2
Washrooms & Separate Entrances

### Markham & Eglinton

**Scarborough** $589,900
Bedrooms: 2 Washrooms: 2
Steps To All Amenities; Schools

### King St West/John St

**Toronto** $679,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept, 9 Ft Ceilings

### William St N & Elgin St

**Kawartha Lakes** $799,900
Bedrooms: 6 Washrooms: 3
Attention Investors!

### Highway 535/Island Rd

**Sudbury** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 2
The Waterfront Property

### Church St/Rossland Rd

**Ajax** $999,949
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Luxury Townhome

### Conlin Rd & Simcoe St

**Oshawa** $1,139,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Sep/Entrance To A Finished Bsmt

### Pharmacy/Lawrence

**Scarborough** $1,219,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Separate Entrance To Basement

### Donald Cousens / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### 401 & Mccowan

**Scarborough** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Minutes To 401, STC, Go Station

### Edenbrookhill / Sandalwood


**Brampton** $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Midland & Danforth


**Scarborough** $1,600
Bedrooms: 2 Washrooms: 1
Basement for rent, Just Renovated

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA
416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# கோட்டாபய வீட்டுக்கு கடும் பாதுகாப்பு! அதிரடிப் படையினர் அதிகளவு குவிப்பு!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டுக்கான பாதுகாப்பு மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவரது வீட்டுக்கு ஏற்கனவே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கையை விட, தற்போது அதிகளவான அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை இலங்கை திரும்புவார் என முன்னர் அறிவித்திருந்த போதிலும், அவரது வருகை இரண்டு வாரங்கள் தாமதமாகும் என்ற தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசிய பின்னரே அவர் தனது வருகையை தாமதப்படுத்தியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இருந்த போதிலும் கடந்த புதன்கிழமை தினம் அதிகளவு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# கோட்டாபய தொடர்பில் தாய்லாந்து பாதுகாப்பு அதிகாரிகள் அறிவிப்பு!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அடுத்த வாரம் முதல் விசேட பாதுகாப்புடன் தேவையான இடங்களுக்குச் செல்ல தாய்லாந்து பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர். இதனைக் கேட்டு கோட்டாபய ராஜபக்ச மகிழ்ச்சி அடைந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் கூறுகின்றன.

இலங்கையில் மக்கள் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ச தனது மனைவியுடன் தப்பியோடினார். முதலில் மாலைதீவுக்குச் சென்ற அவர் பின் சிங்கப்பூரில் தஞ்சம் அடைந்து, பதவி துறப்புச் செய்தியை அனுப்பியிருந்தார். தற்போது அவர் தாய்லாந்தில் அடைக்கலம் புகுந்து பாங்கொக்கில் உள்ள ஒரு விடுதியில் தங்கியுள்ளார். இந்நிலையில், பாதுகாப்புக் கருதி அவர் விடுதி அறையை விட்டு வெளியே வர முடியாதவாறு முடக்கப்பட்டுள்ளார். இதனால் வெளி உலகத்தை பார்க்க முடியாமல் தவிப்பதாகவும், இந்த விடுதி அறையில் முடங்கி இருப்பது சிறையில் இருப்பது போன்று உணர்வைத் தருவதாக அவர் கடந்த நாட்களில் வேதனையுடன் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அவர் அடுத்த வாரம் முதல் விசேட பாதுகாப்புடன் தேவையான இடங்களுக்குச் செல்ல தாய்லாந்து பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர் என அந்நாட்டு தகவல் தெரிவிக்கின்றன.

# 6 இஸ்லாமிய அமைப்புக்களின் தடைகளை நீக்க அரசு தீர்மானம்

தடை செய்யப்பட்டுள்ள 11 இஸ்லாமிய அமைப்புகளில் ஆறு அமைப்புகளின் தடைகளை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை 6 இஸ்லாமிய அமைப்புகளின் தடைகளை நீக்குமாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹாரிஸ், அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கு அமைய ஜனாதிபதி ஊழியர்கள் குழுவின் பிரதானி சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போது தடைகளை நீக்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தையில் தடை நீக்கப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

# இவர்களுக்காக 23 ஒக்டோபர் 2022 இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்



வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

## 30 ஆகஸ்ட் 2022- செவ்வாய் - விநாயகர் (ஆவணி) சதுர்த்தி

பகல் பூஜை உபயம்:-

திரு சுப்பிரமணி குடும்பம், திரு செல்வரெத்தினம் குடும்பம், திரு மனோகரன் குடும்பம்

இரவுப் பூஜை உபயம்:- திரு ஜெயகுமார் குடும்பம்

விநாயகர் சதுர்த்தி இரவு விநாயப்பெருமான் வீதி உலா வருவார்.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

## இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பயங்கரவாத சட்டத்திற்கு பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டம் வருகிறது!

பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு பதிலாக தேசிய பாதுகாப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்தப் புதிய சட்டம் குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்படடுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தயாரித்து வருகிறார். இதன் வரைவு விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்பு சட்டம் 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை கொடூரமான முறையில் அடக்குவதற்காக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக அண்மையில் இடம் பெற்ற போராட்டங்களுக்கு எதிராகவும் பயங் கரவாத தடுப்பு சட்டம் பயன்படுத்தப்பட்டது. அண்மையில் கைதான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தற்போது தடுத்து வைக்கப்பட்டு ள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த செயலுக்கு ஐ.நா. மனித உரிமைகள் அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனத்தையும் கவலையையும் வெளியிட்டுள்ளன. இந்நிலையிலேயே புதிய சட்டம் குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலம் பெயர்ந்தோர் உதவியைப் பெற முன் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துங்கள்!

புலம்பெயர் உறவுகள் மீதான தடையை ஓர் அரசு விலக்குவதும் மற்றோர் அரசு மீண்டும் தடை விதிப்பதும் வழக்கமான ஒன்றாகி விட்டது. தமிழ்த் தேசிய இனத்தை ஒடுக்கும் நோக்கில் தேசிய இனப்பிரச்னையை உருவாக்கி விட்ட தென்னிலங்கை அரசியல் வாதிகளாலேயே ஏராளமான தமிழர்கள் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, புலம்பெயர் உறவுகளின் உதவிகளை இலங்கை அரசு பெற விரும்பினால் தேசிய இனப்பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வை முன் வைப்பதுடன் தனது நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்த வேண்டும்.' இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணயின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.



மேலும், கடந்த சில நாட்களுக்கு முன்பாக குறிக்கப்பட்ட சில புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையையும், அதே போல் புலம்பெயர் தனி நபர்கள் சிலரின் மீதான தடையையும் நீக்கியுள்ளதாக அரசு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியப்பரப்பில் அரசியல் பணியாற்றும் சில கட்சிகளும் அமைப்புகளும் இதனைவரவேற்றுள்ள அதேவேளை, பலர் இந்தஅறிவித்தல் தொடர்பில் அரசின் நம்பகத் தன்மை குறித்து கேள்வி எழுப்புகின்றனர்.


இலங்கை இரண்டு முக்கிய பிரச்னைகளுக்கு முகங் கொடுக்கின்றது. ஒன்று பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையில் இருக்கின்றது. அந்த வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கின்றது. அவ்வாறான நிதிநிறுவனங்களைத் திருப்திப் படுத்துவதும் அதேசமயம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகம் போன்றவற்றைத் திருப்திப்படுத்துவதும் இலங்கைக்கு முக்கியத் தேவைகளாக இருக்கின்றது. ஆகவே, புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் என்பது அரசு தன்னைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகவே தோற்றம் அளிக்கின்றது.

இந்த நாட்டிலிருந்து இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் புலம்பெயர்வதற்குக் காரணமாக இருந்தது அரச பயங்கரவாதமே. தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் இதுவரை நீக்கப்படவில்லை. அரசு தனக்குத் தேவையான நேரங்களில் சில தற்காலிக ஏற்பாடுகளினூடாக புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பைப் பெற முயற்சித்து வருகின்றது.

இந்த விடயங்களை ஈழத் தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழர்களும் சரியாகப் புரிந்துள்ளனர் என்பதை அரசு நினைவில் கொள்ள வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கோருகின்ற அரசு மேற்கண்ட விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால், சாண் ஏற முழம் சறுக்குவதைப் போல் வெளி உலகத்துக்கு ஒரு பேச்சும், உள்ளார்ந்த ரீதியாக அதற்கு எதிரான போக்கையும் கடைப் பிடிப்பதையே எம்மால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

அரசின் மீது நம்பகத்தன்மை ஏற்படுவது போன்ற எத்தகைய செயற்பாடுகளையும் காணமுடியவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு இந்நாட்டின் சமபங்காளிகளான தமிழ்த்தேசிய இனத்தையும் இணைத்துக் கொண்டு நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்படை முகாமிற்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கை பொதுமக்களால் தடுப்பு



முல்லைத்தீவு, வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமிற்கு நிரந்தரமாக காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை இன்றும் முன்னெடுக்கப்பட்டது.இதனை அறிந்து அங்கு சென்ற பொதுமக்கள் வீதியை மறித்து தங்கள் நிலங்களை அளவு செய்வதற்காக முகாமிற்குள் அதிகாரிகளை நுழைய விடாமல் தடுத்து போராடி வருகின்றனர்.

617 ஏக்கர் நிலம் உள்ளடங்குகின்ற குறித்த கடற்படை முகாமில் பெரும்பாலான பகுதி பொதுமக்களுக்கு சொந்தமான நிலங்களாகும்.இதில் ஏற்கனவே கடந்த சில வருடங்களாக நில அளவை செய்து காணியை நிரந்தரமாக சுவீகரிக்கும் முயற்சிகள் இடம் பெற்று வந்தன

இருப்பினும் பொதுமக்களின் எதிர்ப்பால் அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டிருந்த நிலையில் இன்றும் அளவீடு செய்து காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் திரண்டு அப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மன்னாரில் இடம் பெற்று வரும் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் கோபுர அமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும், மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயும் அவசர கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மன்னாரில் இடம் பெற்றது. மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், அதன் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னாரில் இடம்பெற்றது.

# தமிழ் புலம்பெயர் சமூகம்?

தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் மீதான தடை நீக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர்கள் கொழும்பை நோக்கி சாய்ந்தனர்.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியமாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே பிரதான காரணம். ஏனெனில், அதற்கான நம்பிக்கையை சுமந்திரன் அவர்களுக்கு வழங்கியிருந்தார். இன்றுள்ள அனைத்துத் தமிழ்புலம்பெயர் அமைப்புக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளால் வழி நடத்தப்பட்ட அமைப்புகள் தான். விடுதலைப் புலிகள் தான், புலம்பெயர் சமூகத்தை நிறுவனமயப்படுத்தினர். இதில் கே. பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு பிரதான பங்குண்டு.

குமரன் பத்மநாதன் ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து சற்று எட்ட வைக்கப்பட்ட போது, கணிசமான அனுபவமுள்ள தமிழ் புலம்பெயர் செயல்பாட்டாளர்களும் அமைதியாகினர். எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தீர்மானகரமான கட்டத்தை எட்டியபோது குமரன் பத்மநாதன் மீளவும் சர்வதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

உண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கின்ற போதே, ஒருவரை சர்வதேச பொறுப்பாளராக உத்தியோகபூர்வமாக நியமித்தாரென்றால் அதுகே. பி. மட்டும் தான். எனினும் கே.பி. மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு இலங்கையில் சிறைப் படுத்தப்பட்ட பின்னர், கே.பியின் புலம்பெயர் சமூக செல்வாக்கு பெருமளவில் சுருங்கி விட்டது. இப்போது கே. பி. ஒரு விடயமல்ல என்பதே உண்மை. ஒரு வேளை கே.பி. கைது செய்யப்படாமல் இருந்திருந்தால் தமிழ் புலம்பெயர் சமூகம் பெரும் சக்தியாக திரட்சி. பெற்றிருக்கலாம்.

தற்போதுள்ள நிலையில், தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் எனப் பலரும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டாலும் கூட, அவர்கள் அனைவரும் ஒரு நேர் கோட்டில் சந்திக்கக் கூடியவர்கள் அல்லர். அவர்களில் பல வகையினரும் பல கோணங்களிலும் உள்ளனர். ஒரு வகையினர், தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து செயல்படும் விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்னொரு வகையினர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களுடன் தொடர்பில் இருக்கின்றனர். இதில், இப்போது மணிவண்ணனும் புதிதாக சேர்ந்திருக்கின்றார். இன்னொரு பிரிவு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களோடு தொடர்பில் இருகக்கின்றது.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்ட நிலையிலும் நல்லிணக்கம் தொடர்பில் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்ட நிலையிலும் குறிப்பாகக் கூட்டமைப்பின் ஆதரவுடன் தான் சில அமைப்புக்கள் கொழும்புடன் தொடர்பில் இருந்தன. இப்போது நிலைமைகள் முற்றிலும் மாற்றமடைந்திருந்தாலும் கூட, ரணில் மீளவும் ஜனாதிபதியாக வந்திருக்கும் நிலையில் தான் மீளவும் புலம்பெயர் விவகாரம் சூடு பிடித்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், புலம்பெயர் சமூகத்தின் விடயங்களை கையாள்வதற்கென ஒரு பிரத்தியேக அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. தமிழ் புலம்பெயர் சமூகம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டாலும் கூட, புலம்பெயர் சமூகம் என்பதன் மூலம் மேற்கு நாடுகளில்வாழும் சிங்களவர்களும் தான் கவனத்தில் கொள்ளப்படுகின்றனர். தமிழ் புலம்பெயர் சமூகமளவுக்கு அவர்கள் வளர்ச்சி யடையாது விட்டாலும் கூட, அவர்களாலும் குறிப் பிட்டளவு பங்களிப்பை வழங்க முடியும். தமிழ் புலம் பெயர் சமூகத்தினால் எந்தளவுக்குப் பங்களிக்க முடியுமென்பது அடுத்த கேள்வி.

ஏனெனில், விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் புலம்பெயர் சமூகம் காண்பித்த ஈடுபாட்டை இனி ஒரு போதும் காண்பிக்கப் போவதில்லை. அப்போது தாயகம் தொடர்பிலும் தாயகத்தின் தலைமை தொடர்பிலும் அவர்கள் மத்தியில் ஓர் உற்சாகமும் கர்வமும் இருந்தது. 2009,ற்கு பின்னரான காலத்தில் அவர்கள் பெருமளவுக்கு சோர்வடைந்து விட்டனர் - நம்பிக்கை இழந்தும் விட்டனர்.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ் புலம்பெயர் சமூகம் பெருமளவு முதலீடுகளை செய்ய முன் வருமென்று எதிர்பார்க்க முடியாது. பழைய தலைமுறையை சேர்ந்தவர்கள் வேண்டுமானால் குறிப்பிட்டளவு ஆர்வத்தைக் காண்பிக்கலாம். மேலும், பெரும்பாலான புலம்பெயர் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்துக்கு எதிரான நிலையிலிருக்கின்றன. எனினும், சில அமைப்புகளும் தனிநபரகளும் குறிப்பாக 2009இற்குப் பின்னரான சூழலில், தங்களின் தீவிர புலி ஆதரவு நிலைப்பாட்டை கைவிட்டு விட்டனர். அவ்வாறானவர்கள் புலம்பெயர் அலுவலகத்துடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றும் கூறிவிட முடியாது.

# கோட்டபாய பாதுகாப்பாக இலங்கை செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் - மனிதஉரிமை ஆணைக்குழு

முன்னாள் ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு அனுமதிக்க வேண்டும் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு என சட்டம் வழங்கியுள்ள சில சலுகைகள் மற்றும் நன்மைகளிற்கு கோத்தபாய ராஜபக்சவும் உரியவர் என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலை மதிப்பிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதியொருவர் நாட்டிற்கு திரும்பும் வேளை வேண்டுகோள் விடுக்கும் போதெல்லாம் சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பினை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் தற்போது வசிக்கும் கோட்டாபய குடும்பத்தினர் நாட்டிற்கு பாதுகாப்பாக வருவதற்கு உரிய பாதுகாப்பை வழங்கவேண்டும் என சட்டம் தெரிவிக்கின்றது எனவும் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ச குடும்பத்தினர் நாட்டிற்கு பாதுகாப்பாக திரும்புவதற்கான உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்கவேண்டும் எனவும் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



வெளிநாட்டில் வசிக்கும் கோட்டாபய ராஜபக்ச குடும்பத்தினர் நாட்டிற்கு திரும்புவதற்கான அடிப்படை உரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அச்சுறுத்தல் நிலைமை குறித்து இலங்கை அதிகாரிகள் முழுமையான மதிப்பீடுகளையும் மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் சட்ட கட்டமைப்பிற்குள் அவ்வாறான அடிப்படை உரிமை மீறல் நிகழ்வதை தடுப்பதற்கான அனைத்து பொருத்தமான வழிமுறைகளை எடுத்து கோட்டாபய ராஜபக்ச குடும்பத்தினர் நாட்டிற்கு திரும்புவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு செல்வார் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. தாய்லாந்தில் தங்கியுள்ள அவரது பயணம் சுமார் இரண்டு வாரங்கள் தாமதமாகும் என தெரியவருகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றமை இந்த தாமதத்துக்கு காரணம் என அறியமுடிகிறது.

பாதுகாப்பு முக்கியப் பிரச்சினை என்பதால், அவர் நாடு திரும்புவதை தாமதப்படுத்துமாறு புலனாய்வுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. அவரது பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் பூர்த்தியானதும் இரண்டு வாரங்களில் அல்லது அதற்கு முன்னரே அவர் திரும்பி வரலாம் என்று அரசாங்க வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் பதவிக் காலம் நிறைவு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அம்மையாரின் பதவிக் காலம் அடுத்த வாரத்துடன் நிறைவடைகிறது. இதனால், அவர் நாடு திரும்பவுள்ளார். பதவிக் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கு மீண்டும் அந்தப் பதவியை வகிக்க வாய்ப்பு வழங்கப்படவிருந்த போதும், இதனை நிராகரித்த அவர் தனது தாயகமான சிலிக்கு செல்லவுள்ளாரென்று கூறியுள்ளார்.

இலங்கையின் இறுதிப் போர் காலத்தில் இடம் பெற்றவை என்று கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள், மனித குலத்துக்கு விரோதமான நடவடிக்கைகள், இனப் பிரச்சனை தொடர்பாக பச்லெட் அம்மையார் கரிசனை கொண்டிருந்தார்.

இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கவலைகள் கண்டனங்களையும் வெளியிட்டிருந்தார். இந்நிலையில், வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர், ஒரு பெண்ணாகவும் வாழ்நாள் முழுவதும் பெண்ணியவாதியாகவும் நம் அனைவருக்கும் பயனளிக்கும் சமூக இயக்கங்களில் முன்னணியில் இருந்த பெண் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு நான் நன்றிகளைதெரிவிக்கிறேன்.

அவர்கள் பெரும்பாலும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் கேட்கப்படாத குரல்களை கொண்டு வந்தவர்கள். நான் தாயகம் திரும்புகிற போதும் உங்களுடன் தொடர்ந்தும் நிற்பேன். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான எனது பயணம் இத்துடன் நிறைவடையாது என்றும் அவர் கூறினார். தமிழீழத்தில் நடைபெற்ற இனப்படுகொலையை ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் மிகுந்த கரிசனையுடன் நோக்கிய ஒருவராக அவர் விளங்கினார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# ஸ்ரீலங்காவுக்கு கடுமையான நிபந்தனைகளுடன் டொலர்களை வழங்க தயாராகும் தமிழர் பேரவை?

சிறிலங்காவில் நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான அந்நிய செலாவணியை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் போது தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைபு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். தென்னிலங்கை ஊடகமொன்றிற்கு வழங்கிய பிரத்தியேக தகவலின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர் 2016ம் ஆண்டு தென்னிலங்கையில் வெள்ளம் ஏற்பட்டிருந்த போது, உலகத் தமிழர் பேரவை சிங்கள மக்களுக்கு பெரும் உதவிகளை வழங்கியது.

ஆனால் கடந்த ஆண்டு இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுவாச கருவிகளை வழங்கிய போது, நாங்கள் தடை செய்யப்பட்ட



அமைப்பு என்பதால் அதனை பெற்றுக் கொள்ள இலங்கை அதிகாரிகள் மறுத்தார்கள். இதனால் பல மரணங்கள் சம்பவித்தன. அதற்கு அதிகாரிகள் பொறுப்பு கூற வேண்டும்.

இலங்கையில் புலம்பெயர் அமைப்புகள் மீது விதிக்கப்பட்ட தடை காரணமாக வருடாந்தம் 300 மில்லியன் டொலர்கள் அளவில் அந்நிய செலாவணி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையை பூர்வீகமாக கொண்ட பலர் ஜேர்மனி போன்ற நாடுகளில் பில்லியனியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இலங்கையில் பல பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய முடியும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். முன்னைய அரசாங்கத்தினால் உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை அண்மையில் நீக்கப்பட்டது.

ஜெனீவா மனித உரிமை பேரவையின் மாநாடு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனை சமாளிக்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாம் கருதுகிறோம்' எனக் குறிப்பிட்டார். குளோபல் தமிழ் மன்றம் உட்பட ஆறு அமைப்புகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய 316 பேர் மீதான தடை சமீபத்தில் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கடன் சலுகை விவகாரத்தில் சீன கொள்கை மாற வேண்டும் என்கிறார் ஜனாதிபதி ரணில்

கடன் சலுகையை வழங்குவது தொடர்பில் சீனா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்டக் குழு நாட்டுக்கு வந்துள்ள நிலையில் ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எட்டுவது எளிதான காரியமல்ல. கடனை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் சீன அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளோம். மேலும், அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் பொதுவான நிலைப்பாடு ஒன்றை முன்வைக்க வேண்டிய தன் அவசியம் குறித்தும் தெரிவித்துள்ளோம்.

சீனா, நிச்சயமாக, ஒரு வித்தியாசமான அணுகுமுறையை ஏற்றுள்ளது. எனவே, பிற கடன் வழங்குபவர்கள் சீனாவுடன் எவ்வாறான இணக்கத்துக்கு வர முடியும்? - என்று அவர் இதன் போது கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, இலங்கைக்கு பல பில்லியன் டொலர் பிணை எடுப்பு வழங்குவதற்கு முன்னர் கடன் வழங்குநர்களுடன் பொதுமான உத்தரவாதங்கள் தேவைப்படும் என சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதற்கு கடன் வழங்கிய நாடுகள் உத்தரவாதமளிக்காத பட்சத்தில் நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எட்ட முடியாது போகும் என்பது முக்கியமானது. தவிர, 2001 முதல் 2021 வரை இலங்கைக்கு சீனா வழங்கிய கடன் கிட்டத்தட்ட 995 கோடி டொலர்கள் என்று சில சுயாதீன பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ள நிலையில், நாட்டின் நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடன் 5,100 கோடி டொலர்கள் ஆகும். இலங்கைக்கு 2022 இல் 690 கோடி டொலர் வெளிநாட்டுக் கடன் இருந்தது. ஆனால் வரலாற்றில் முதன்முறையாக வெளிநாட்டு இருப்புக்கள் தீர்ந்து போனதால் ஏப்ரல் மாதத்தில் திருப்பிச் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு நிதி வசதிகளை வழங்குவதற்கு கடன் வழங்கும் தரப்பினரிடமிருந்து போதிய உத்தரவாதம் தேவை என சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எவ்.) அறிக்கை ஊடாக மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் 23 ஆகஸ்ட் 2022 இரவு இலங்கைக்கு சென்ற சர்வதேச நாணய நிதியக் குழு கலந்துரையாடலை ஆரம்பித்தது. நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் மத்திய வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த பேச்சின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்டத்திலான உடன்படிக்கையை எட்டமுடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அனுமதியைப் பெற வேண்டும். டிசெம்பர் மாதத்துக்குள் விரிவான கடன் சலுகை திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே மத்திய வங்கி ஆளுநரின் நம்பிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாடாகும் - வாசு கண்டு பிடிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்க நாட்டு மக்கள் எந்த அரசாங்கத்திற்கும் அதிகாரம் வழங்கவில்லை.



நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நாட்டை காட்டிக்கொடுக்கும் ஒரு செயற்பாடாக கருதப்படும் என இடது சாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சியின் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் அத்தியாவசிய பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளன. அதிக உணவு பண வீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 5ஆம் இடத்தில் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

பொருளாதார பாதிப்பு,வாழ்க்கை செலவு அதிகரிப்பு ஆகிய காரணிகளினால் நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது நிவாரணம் வழங்கியதை போன்று தற்போதும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுகளை நிவாரணமாக வழங்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதே பொருளாதார மீட்சிக்கான இறுதி தீர்வு என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் போது நடுத்தர மக்கள் எதிர் கொள்ளும் பாதிப்பு குறித்து அவர் அவதானம் செலுத்தவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு நாட்டை அடிபணிய வைக்க நாட்டு மக்கள் எந்த அரசாங்கத்திற்கும் அதிகாரம் வழங்கவில்லை.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்துவது நாட்டை காட்டிக்கொடுக்கும் ஒரு செயற்பாடாகவே கருதப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா முன்வைத்த பொருளாதார மீட்சிக்கான கொள்கை திட்டத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதாக குறிப்பிடப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார கொள்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டால் அவர்கள் ஜனாதிபதியுடன் சர்வ கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையலாம் என்றார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீள் பாவனைக்கு சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்புக்கள் கடும் கண்டனம்!

தற்போது பாவனையில் இல்லை என்று அரசாங்கத்தினால் சர்வதேச இராஜ தந்திரிகளிடம் கூறப்பட்ட மிகமோசமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளமையைக் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், இலங்கை அரசாங்கம் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படவேண்டியது அவசியமாகும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே, கல்வெள சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷாந்த ஜீவந்த குணதிலக ஆகிய மூவரையும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு விசாரணையாளர்கள் தீர்மானித்துள்ள நிலையில், அது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு ஆகிய சர்வதேச அமைப்புக்கள் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கங்களின் ஊடாகக் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளன.

அதன்படி இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்திய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கூறியிருப்பதாவது:

இலங்கை அதிகாரிகள் கடந்த 18 ஆம் திகதி அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டத்தைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்திருக்கும் வசந்த முதலிகே, ஹஷாந்த ஜீவந்த மற்றும் சிறிதம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். தற்போது பாவனையில் இல்லை என்று இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச இராஜதந்திரிகளிடம் கூறப்பட்ட மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று அப்பதிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இவ்விடயம் தொடர்பில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூ ர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலக்கு வைக்கப்பட்ட சில போராட்டக்காரர்களைக் கைது செய்வதற்கு மிகமோசமான பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப் பட்டுள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோரும் அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக இடை நிறுத்துமாறும் அமைதிப்போராட்டக்காரர்களை இலக்குவைப்பதை நிறுத்துமாறும் வலியுறுத்துகின்றோம் என்று அப்பதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# யாழ்ப்பாணத்திற்கு "ஹிந்தி" தேவையா! எதற்காக யாழ்.இந்துவைத் தெரிவு செய்தார்கள்?

கடந்த அண்மை நாட்களாக யாழ்ப்பாணத்தில் ஹிந்தி மொழி கற்பது பற்றிய வாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதரவாக ஒரு தரப்பினரும், எதிராக இன்னொரு தரப்பினரும் என சமூக வலைதளங்கள் களை கட்டிக் கொண்டிருக்கின்றன.




இப்படியொரு வேலைத் திட்டத்தை வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் மேற் கொண்டால் அது எப்படியான எதிர்வினைகளைத் தோற்றுவிக்கும்?, அது வெற்றியளிக்குமா? தோல்வியளிக்குமா? என்கிற மதிப்பீடுகளுக்குப் பதில் தரும் வகையில் இந்த வாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

வடக்கில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அடுத்த இடத்தில் இருப்பது யாழ். இந்துக்கல்லூரி தான். புலமைத்துவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், கருத்துருவாக்க ரீதியிலும் ஈழத் தமிழ் சமூகத்தினுள் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கினை இந்தக் கல்லூரி கொண்டிருக்கிறது.

இதன் விளைவாகவே தமிழர் விடுதலையை முன்னிறுத்திய எத்தகைய போராட்டமாயினும் சரி, யாழ்.பல்கலைக் கழகத்திற்கு அடுத்த நிலையில் யாழ். இந்துக் கல்லூரி திகழ்ந்திருக்கின்றது.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கியகர்த்தாக்கள் பலரும் கற்ற பாடசாலை இது. எனவே தான் இங்கு நடக்கும் மாற்றங்களானவை தமிழ் சமூகத்தினுள் மிக விரைவாக வேர் விடும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது. அதற்கு அடுத்த காரணம் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் ஓர்மம். "இந்து அன்னை" என்றே மாணவர்கள் தம் பாடசாலையை அழைக்கின்றனர்.

அன்னை எனும் போதே பாடசாலையை தாய்க்கு ஒப்பானவளாக உளத்தில் பதியவைத்துக் கொள்கின்றனர். எனவே ஒரு தாய் தன் பிள்ளைகளுக்குத் தீங்கிழைக்கவோ, பிழையாக வழிநடத்தவோ மாட்டாள் என்கிற நம்பிக்கை மாணவர்களின் நெஞ்சுரமாக இருக்கிறது.

எவ்விடத்திலும் தன் அன்னையை விட்டுக் கொடுக்கவோ, பழிச்சொல் சுமத்தப்படவோ இந்துவின் மைந்தர்கள் யாரும் விரும்புவதில்லை. அந்த மகுடச் சொற்களின் பின்னால் இருக்கும் உளவியல் சரத்தினைத் தெளிவாகப் புரிந்து கொண்டே, தமிழ் இனத்திற்கு எவ்விதத்திலும் உதவாத ஹிந்தி மொழி கற்பித்தல் அறிமுகமானது, அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

உள்நாட்டளவிலும், உலகளவிலும் முக்கிய ஆளுமைகளாக – புலமைவாதிகளாக செயற்படும் இந்துவின் மாணவர்கள் யாருக்கும், ஹிந்தியும், அது அடுத்ததாகக் கொண்டுவரும் இந்துத்துவா அரசியலும் தெரியாமலில்லை. ஹிந்தி மொழி ஆக்கிரமிப்பின் பல்வேறு வடிவங்களையும் அண்டைத் தேசமான தமிழகம் எதிர் கொண்டே வளர்ந்திருக்கிறது.

ஹிந்தி மொழி திணிப்புக்கு எதிரான போராட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் இறந்தும் போயிருக்கின்றனர். இப்போதும் கூட ஹிந்தி மொழி திணிப்புக்கு எதிராகத் தமிழகம் எவ்வாறெல்லாம் போராடுகிறது என்பதை சமூக வலைதளங்கள் ஊடாக அறிந்து கொண்டுதான் இத்தலைமுறையினர் இருக்கின்றனர்.

இந்துத்துவா கட்டியெழுப்பும் ஏனைய மதத்தினர் மீதான காழ்ப்புணர்வு அரசியல் எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை இந்திய வடமாநிலங்களின் நடக்கும் வன்முறைகள் தகுந்த ஆதாரங்களாக இருக்கின்றன. ஹிந்தி, இந்து, இந்துத்துவா என்கிற ரீதியில் வளரும் இந்த ஆபத்தை யாரும் புரியாமல் இல்லை. ஆயினும் யாழ்ப்பாணத்திற்கு ஹிந்தி அறிமுகமாவதை ஆதரிக்கின்றனர் என்றால், தன் இந்து அன்னை மீது வரலாற்றில் ஏற்படப்போகும் பழிச் சொல்லிலிருந்து காப்பாற்றும் நோக்கமே தவிர வேறொன்றுமிருக்கப் போவதில்லை.

அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளல் தவறில்லையே, ஹிந்தியைத் திணிப்பது தான் தவறு, விரும்பிக் கற்பது தவறில்லையே, அது அவரவர் உரிமை சார்ந்த விடயம் என்கிற வகையில் பொதுப்புத்திக்கு வலியேற்படாதவாறு விச ஊசி ஏற்றப்பட்டிருக்கிறது.

இந்த மொழியைக் கற்பதனால் என்ன பயன்? என்கிற கேள்விக்கு உரிய பதில் வழங்கப்படாமலேயே அறிமுகம் நிகழ்ந்திருக்கிறது. பல்கிப் பெருகி வரும் தொழில் நுட்பத்துறைகள் பல்வேறு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி விட்டுள்ளன.

ஆங்கிலம், மாண்டரீன், கொரியன், அரபு ஆகிய மொழிகளுக்குள் சுருண்டு விட்ட, இந்தத் தொழில் சந்தையில் ஒருவர் இடம் பிடிக்க அந்த மொழிகளையே மாணவர்கள் கற்க வேண்டும்.

மாறாக தேவபாசை என்கிற அளவில் வதந்தி பரப்பப்படும் ஒரு மொழியைக் கற்ற என்ன பயன். எதிர்காலம் என்பது தேவனோடு பேசுவதல்ல. தொழில் நுட்பத்தோடு வாழ்வது. எண்ணிம சூழலோடு பொருந்திப் போவது. ஏற்கனவே இலங்கையில் பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் தம் வாழ்க்கைக்கு உதவாத பல பாடங்களைக் கற்கின்றனர் என்ற விமர்சனம் உண்டு.

இந்நிலையில் தொழில் வாய்ப்பைத் தராத, அறிவியலைப் பெருக்காத, பகுத்தறிவை ஏற்படுத்தாத ஒரு மொழியை நம் பிள்ளைகள் ஏன் கற்கவேண்டும்? ஆசிய வல்லரசு கனவில் இந்தியா ஒரு டம்மி பீஸ் பௌதீக ரீதியில் சீனா இந்தியாவை சுற்றி வளைத்துப் பல ஆண்டுகள் ஆகி விட்டன.

இந்நிலையில் 2500 வருடங்களாக இந்தியாவுக்குக் கீழே, அமைவிடம் பெற்றிருக்கும் இலங்கை என்கிற குட்டித்தீவையே அந்த வல்லரசினால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

அதன் அனைத்து ராஜதந்திரங்களையும் அடித்துத் துவைத்துக் காயப் போட்டு விட்டு இலங்கை வளர்ந்திருக்கிறது. தேவை வரும்போது பாது சேர்த்துக் கொள்ளவும், தேவை முடிந்ததும் கழற்றி வீசுவதுமான இராஜ தந்திரப் பொறியை இலங்கை இந்தியாவை நோக்கி நிரந்தரமாகவே வைத்திருக்கிறது.

இலங்கையினிடத்தில் ஏற்படும் தோல்விகளைச் சமாளித்து, தனக்கான தனி ராச்சியத்தை வடக்கு, கிழக்கில் உருவாக்கும் வேலைத் திட்டத்திற்குப் பணிசெய்ய அடிமைகளை உருவாக்கப் போகிறோமா? உண்மையில் இது ஒரு நாட்டின் தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயம்.

தூதரகங்கள், தூதரகங்களின் நிதியளிப்பில் இயங்கும் நபர்கள், நிறுவனங்கள், அவை மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள் குறித்தெல்லாம் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தரப்பினர் தான் கவனிக்க வேண்டும்.

(22ம் பக்கம் பார்க்க)

# மக்களால் தெரிவான ஜனாதிபதியாக ரணில் வகுத்து வரும் உபாயங்கள்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக
– பார்த்தீபன் –

நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதவி காலத்தை பூர்த்தி செய்து அடுத்த பதவி காலத்திற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வருவதற்கு தேவையான வியூகங்களை வகுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ மிகுதியாக வைத்து சென்றுள்ள இரண்டரை வருடங்களுக்கான பதவிக் காலத்திற்காகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2024 நவம்பருடன் இந்தப் பதவிக் காலம் முடிவுக்கு வருகின்றது. இந்த இரண்டரை வருடங்களை அவர் பூர்த்தி செய்வரா என்ற கேள்வி ஆரம்பத்தில் எழுந்திருந்தது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது காரணம்: பாராளுமன்றத்தில் ஆதரவற்ற நிலை – அதாவது அவரது கட்சியில் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் தான் உள்ளார். பாராளுமன்றத்தில் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதி தன்னுடைய பதவி காலத்தை பூர்த்தி செய்வது கடினமானதாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

இரண்டாவது: காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் ரணிலுக்கு எதிரான போராட்டத்தையும் தீவிரப்படுத்தியிருந்தார்கள்.

மூன்றாவது: நாட்டின் பொருளாதார நிலைமை உடனடியாகச் சீரடையக் கூடிய ஒன்றாகக் காணப்பட்டிருக்கவில்லை. இதனால் மக்களின் போராட்டங்கள் தொடரும் என்ற ஒரு எதிர்பார்ப்பு காணப்பட்டது.

நான்காவது: பிராந்திய சர்வதேச ரீதியான நெருக்கடிகள்.

இவை காரணமாக கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகும் ரணில் விக்கிரமசிங்க அவருக்குக் கிடைத்த பதவிக் காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடியவராக இருப்பாரா என்ற கேள்வி பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டது.

ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது அவர் மக்கள் ஆணையைப் பெறாத ஒருவர். அவர் பதவி விலகி புதிய தேர்தலை நடத்த வேண்டும்' என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பன கோரிக்கை முன் வைத்திருந்தன. ஆனால், பதவியேற்று சுமார் ஒரு மாத காலத்துக்குள்ளாகவே இந்த நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் ரணில் வெற்றி பெற்றிருக்கின்றார்.




இப்போது, தனது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல் மற்றொரு தவணைக்கு அதாவது 2024இல் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதியாவதற்கான உபாயம் ஒன்றையும் அவர் வகுத்துச் செயற்படுகின்றார் என்பதை உணர முடிகின்றது.

பாராளுமன்றத்தில் தனது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயொரு ஆசனம் மட்டும் உள்ள நிலையில் அரசாங்கத்தை நடத்துவதற்கு ரணில் தடுமாறுவார் எனச் சொல்லப்பட்ட போதிலும், பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் அரசாங்கத்தை ஸ்திரமான முறையில் கொண்டு செல்ல முடியும் என்பதை ரணில் இந்த ஒரு மாத காலத்தில் உணர்த்தியிருக்கின்றார். இது பரஸ்பர தேவையின் அடிப்படையிலான ஒரு செயற்பாடாகும்.



அரகலய எனப்படும் மக்கள் போராட்டத்தினால் உருக்குலைந்து போனது ராஜபக்சக்களின் அரசியல்தான். அத்துடன் பொதுஜன பெரமுனையும் இதனால் பாரிய பின்னடைவைச் சந்தித்தது. இந்த நிலையில் சில காலத்துக்கு தமது இருப்பைப் பாதுகாப்பதற்கு உதவக் கூடியவராக ரணில் இருப்பார் என ராஜபக்சக்கள் சரியாகத் தான் மதிப்பிட்டிருந்தார்கள்.

மறு புறத்தில் கடந்த பொதுத்தேர்தலில் ஒரேயொரு ஆசனத்துடன் படுதோல்வியைச் சந்தித்த ரணிலுக்கும், அவரது கட்சிக்கும் புத்துயிர் கொடுப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமைந்தது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது போயிருந்தால் ரணிலின் அரசியல் அஸ்தமனமாகியிருக்கும்.

ஆக, இரண்டு தரப்புக்களுக்குமே ஒருவரை ஒருவர் ஆதரிக்கவேண்டிய பரஸ்பர தேவை உள்ளது. அதனால் முரண்பாடுகள் உருவானாலும் புரிந்துணர்வின் அடிப்படையில் அதனைத் தீர்த்துக் கொள்ளக் கூடியவர்களாகவே ரணிலும் ராஜபக்சக்களும் உள்ளார்கள். இந்த உறவு முறியுமாக இருந்தால் இருதரப்பினரது அரசியல் எதிர்காலத்துக்கும் அது சமாதி கட்டுவதாக அமைந்து விடும்.

அரகலிய போராட்டத்தினால் தமது கட்சிக்கான மக்கள் செல்வாக்கு எந்தளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது என்பது மொட்டு அணிக்குத் தெரியும். அதனால், பெரும்பாலான விடயங்களில் அடக்கி வாசிக்க வேண்டிய தேவை அவர்களுக்கும் உள்ளது.

மொட்டுவின் பாராளுமன்றப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு தான் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்பது ரணிலுக்குத் தெரிந்து. தான் இருக்கின்றது. ஆனால், மொட்டு தனக்கு எதிராகச் செயற்படாது என ரணில் கணிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

முக்கியமாக திடீர்த் தேர்தல் ஒன்றைச் சந்திக்க மொட்டு தயாராகவில்லை. அரகலய போராட்டத்தினால் ராஜபக்சக்களின் நற்பெயர் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனைப் புனரமைக்க சில காலம் செல்லும் என்பது ராஜபக்சக்களுக்கும் தெரியும் ரணிலுக்கும் தெரியும். ஜனாதிபதி என்ற முறையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் அடுத்த வருடம் ரணிலின் கைகளுக்கு வந்து விடும். இது மொட்டுவுக்கு அச்சுறுத்தல்.

அரகலய' போராட்டம் பெருமளவுக்கு ஒடுக்கப்பட்டு விட்டாலும், அது முழுமையாக இல்லாமல் போகவில்லை. அது உயிர்துடிப்புடன் இல்லாவிட்டாலும், அது உயிருடன் தான் உள்ளது. ரணிலும் அதனைத் தான் விரும்புகின்றார். ராஜபக்சக்கள் அவர்களிடமுள்ள பாராளுமன்றப் பலத்தைப் பயன்படுத்தி தனக்கு எதிராகச் செயற்படுவதற்கு முற்பட்டால் மீண்டும் 'அரகலய' தூண்டி விடுவதற்கான மறைமுகமான திட்டம் ஒன்று ரணிலிடம் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கருதுகின்றன. ராஜபக்சக்களை கைக்குள் வைத்திருப்பதற்கான ஒரு துருப்புச் சீட்டாக அரகலயவை ரணில் பயன்படுத்தலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

இரண்டாவது துருப்புச் சீட்டாக பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தை அடுத்த வருடத்தில் ரணில் தன்னுடைய கைகளில் எடுத்துக் கொள்வார்.

இதனை விட ராஜபக்சக்கள் தரப்பில் காணப்படும் உள்ளக முரண்பாடுகள், அதிகாரப் போட்டிகளைப் பயன்படுத்திக் கொண்டு 2024 இறுதியில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவதற்கான திட்டம் ஒன்றும் ரணிலிடம் உள்ளதாகத் தெரிகின்றது. ரணில் விரும்பினால் இந்தத் தேர்தலை ஒரு வருடம் முன்கூட்டியே நடத்தவும் முடியும். அதற்கான அதிகாரம் ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது.

மொட்டுவின் பிதாமகரான மகிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரையில் தனது சகோதரர்களில் எவரையும் இன்னொரு ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க அவர் தயாராகவில்லை. கோட்டாபயவுடன் பெற்றுக் கொண்ட அனுபவம் போதும் என அவர் நினைக்கிறார். பஸில் ராஜபக்சவுக்கு ஜனாதிபதிக் கனவு இருந்தாலும் அவரைக் களமிறக்குவது 'அரகலய' போராட்டத்தை விட மோசமான நிலையை ஏற்படுத்திவிடும் என்பது மகிந்தவின் கணிப்பு. ஏனெனில் பஸில் மீதும் அதிகளவு குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்த நிலையில் அவரது தெரிவு அவரது 'இளவரசர்' நாமல் ராஜபக்ச தான். ஆனால், 2023இல் அல்லது 2024 இல் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் நாமலை களமிறக்க மகிந்த விரும்பவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றது.

அரகலய போராட்டத்தின் சூடு தணியாத நிலையில் நாமலை களமிறக்குவது ஆபத்தானதாகி விடலாம் என்பது முதலாவது காரணம். நாமலுக்கு மேலும் அனுபவம் – முதிர்ச்சி தேவை என்பது இரண்டாவது காரணம்.

ராஜபக்ச குடும்பத்தை சாராத ஒருவரை களமிறக்க முற்பட்டால் கட்சியையே இழக்க வேண்டிய நிலை வரலாம் என்ற அச்சமும் மகிந்தரிடம் உள்ளது. சுதந்திரக் கட்சியை மைத்திரியிடம் பறிகொடுத்தது இதில் அவருக்கு நல்ல அனுபவம். அதனால், ராஜபக்ச குடும்பத்தை சாராத எவரையும் மொட்டு கட்சியின் சார்பில் அவர் களமிறக்கமாட்டார்.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் ஒரு முறை ரணிலை ஜனாதிபதியாக்கி ரணிலின் அடுத்த பதவிக் காலத்தின் முடிவில் நாமலை களமிறக்கலாம் என மகிந்தர் சிந்திப்பதாகத் தெரிகின்றது. தற்போது காணப்படும் அரசியல் சூழ் நிலையில் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், கட்சித் தலைமையை பாதுகாப்பாக தமது வாரிசான நாமலிடம் ஒப்படைப்பதற்கும் இவ்வாறான ஒரு உபாயத்துடன் தான் மகிந்த சிந்திப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் சண்டே டைம்ஸ் ஆங்கில வார பத்திரிகைக்கு மஹிந்த ராஜபக்ச வழங்கிய நேர்காணல் ஒன்றில் தற்போதைய நிலைமையில் நாட்டை வழி நடத்திக் கொண்டு செல்லக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் என புகழாரம் சூட்டியிருந்தது கவனிக்கத்தக்கது.

கடந்த ஜீன் 9 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியைத் துறக்கும் வரையில் அதிர்ஸ்டமற்ற ஒருவராகவே ரணில் கருதப்பட்டார். ஆனால், அதற்குப் பின்னர் சஜித் பிரேமதாசவின் தயக்கத்தின் காரணமாகவும், மாற்றமடைந்த அரசியல் நிலைமைகளாலும் ரணிலுக்கு வெள்ளி திசை ஆரம்பமாகியுள்ளது. பூஜ்ஜியத்திலிருந்து அவர் இராஜ்ஜியம் ஒன்றை அமைத்துக் கொண்டமைக்கு அதிஸ்டம் மட்டும் காரணமல்ல. அரசியல் கள நிலைமைகளை புரிந்து கொண்டு அதற்கேற்ற அவரது நிதானமான காய்நகர்த்தல்களும் இதற்குக் காரணம். அரகலிய போராட்டம் கலைந்து போனமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று: அதற்கு எதிராக ரணில் முன்னெடுத்த ஒடுக்குமுறைகள். படைகளையும்.(22ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

20 ஆகஸ்ட் 2022 முதல் 26 ஆகஸ்ட் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி யோகமூர்த்தி

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி யோகமூர்த்தி அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சாந்தகுமாரி யோகமூர்த்தி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 49வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு நடராஜா

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமையாகும்.அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி (காந்தன்) அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கதிர்காந்தன் நன்னித்தம்பி அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 30 ஆகஸ்ட் 2022 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடை யப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 3வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 30 ஆகஸ்ட் 2022 விநாயகர் சதுர்த்தி தினமான வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி நிர்மலாதேவி தவலிங்கம்

### (ஆசிரியை - சாந்தி)

பருத்தித்துறை தும்பலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் (சாந்தி) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 23 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




20 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி உமாகாந் உசாந்தினி இணையர்களது 12வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றிச்சேட் றெட்ணகாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன் றோகானின் 1வது பிறந்த நன்நாளுக்காகவும் செல்வப்புதல்வன் றோசானின் 5வது பிறந்த நன்நாளுக்காகவும் சகோதரர்கள் இருவரும் தமது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கரெத்தினம் தம்பிராஜா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




21 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி யோகமூர்த்தி அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




21 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஞானசேகரன் லோஜினி இணையரது 33வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




22 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி கல்யாணி சந்திரகுமார் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




23 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை தும்பலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சாந்தி என்று அன்பாக அழைக்கப்படும் ஆசிரியை திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





23 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பகீரதன் ரட்ஷகி இணையவரது 13வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




24 ஆகஸ்ட் 2022 புதன்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 20வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலசுந்தரம் நடராஜா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 31ம்நாள் நினைவஞ்சலி



## திரு நடராஜா பாலசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த நடச்சி அண்ணாஎன்று அன்பாக அழைக்கப்படும் திரு நடராஜா பாலசுந்தரம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நடராஜா பாலசுந்தரம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.




25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சிங்கநாயகம் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாளும், திருமதி பரிமளம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

# கனடா திருப்பதி வெங்கடாஜலபதி திருக்கோவில்

## விநாயகர் சதுர்த்தி திருவிழா

### ஆவணி 14 செவ்வாய்க்கிழமை (30.08.2022)



| | |
|---|---|
| மாலை 5:30மணிக்கு | நவகலச பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம் |
| மாலை 6:00மணிக்கு | ஸ்ரீ விநாயக பெருமான் மூலவர் விஷேஷ அபிஷேகம் |
| இரவு 7:30மணிக்கு | ஸ்ரீ வெங்கடாஜலபதி பெருமாள் தினசரி பூஜை |
| இரவு 8:00மணிக்கு | ஸ்ரீ சம்பத் விநாயக பெருமான் மூலவர் பூஜை |
| இரவு 8:15மணிக்கு | வசந்த மண்டப பூஜை, மஹா தீபாராதனை |
| இரவு 8:45மணிக்கு | ஸ்ரீ சம்பத் விநாயக பெருமான் திருவீதி உலா |
| இரவு 9:30மணிக்கு | நிறைவு தீபாராதனை, பிரசாத விநியோகம் |

மேற்படி திருவிழா நாளில் அடியார்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து உற்சவத்தில் பங்கு கொண்டு பால், பழம், பூக்கள், பூஜைப் பொருட்கள் கொண்டுவந்து விநாயக பெருமானுக்கு அர்ப்பணித்து திருவருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழும் வண்ணம் அடியார்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*தென்னாடுடைய சிவனே போற்றி! எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!*
*இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!*

#1240 Ellesmere Road Scarborough M1P 2X4

தொலைபேசி எண்கள்: 416 – 400 – 5784/ 647 – 990 – 5784



# வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

| வீடு | வாகனம் | மோட்டர் சைக்கிள் | படகு | கனரக வாகனம் |
|---|---|---|---|---|
| HOME | AUTO | MOTOR CYCLE | BOAT | TRAILER |

## காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்



TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**







மேன்மைகொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# அருள் மிகு திரு முருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

**ஆரம்பம்**

**17 - 08 - 2022**



**பூர்த்தி**

**26 - 08 - 2022**

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 1ம் நாள் (17-08-2022) அச்சுவினி நட்சத்திரமும். ஸப்தமி திதியும் கூடியுள்ள நன் நாள் புதன் கிழமை மாலை தொடங்கி ஆவணிமாதம் 10ம் நாள் (26-08-2022) வெள்ளிக்கிழமை அமாவாசை திதியில் பூர்த்தியுறும் வகையில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும். கந்தன் பக்தர்களாகிய அனைவரும் கலந்துகொண்டு கந்தனின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**1ம் திருவிழா தொடக்கம் 8ம்திருவிழா வரை**

மாலை 5.30 ஸ்நபன கும்பாபிஷேகம்
மாலை 7.00 மூலமூர்த்திகட்கு பூஜாரம்பம்
மாலை 7.30 கலை நிகழ்ச்சி
மாலை 8.00 வசந்தமண்டபப் பூஜை
தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா

**சப்பறத்திருவிழா**
**24-08-2022**

மாலை5.00 ஸ்நபநாபிஷேகம்
மாலை7.00 பூஜாரம்பம்
மாலை7.30 கலைநிகழ்வுகள்
மாலை8.00 வசந்தமண்டபபூஜாரம்பம்
தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா

**தேர்த்திருவிழா**
**25-08-2022**

காலை 7.30 ஸ்நபனாபிஷேகம்
காலை 09.00 பூஜாரம்பம்
காலை 10.00 வசந்தமண்டபபூசை
தொடர்ந்து தேர்வீதியுலா,
பச்சையணிந்த திருக்கோலம்
1.00 மணிபிராயச்சித்தசாந்தி

**1008 சங்காபிஷேகம்**
**26-08-2022**

7.00 காலை பூஜை
8.00 காலை சங்காபிஷேகம்
11.00 காலை பூஜாரம்பம்
மாலை வசந்தமண்டபபூசை

**தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன**

சகல பக்தர்களும் தேர்த்திருவிழாவில்
காவடி,கற்பூரச்சட்டி,பாற்குடம் எடுக்கஉள்ள பக்தர்கள் பதிவுசெய்துகொள்வது நன்று
உற்சவநாட்களும் உபயகாரர்களின் விபரமும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 16-08-2022 | செவ்வாய்காலை | கணபதிஹோமம் | | பா-விக்கினராஜா |
| 17-08-2022 | புதன் | 1ம் திருவிழா | ஓம் பிரணவவுபதேச | சி-அ-ஜயாத்துரை குடும்பம் திருநெல்வேலி |
| 18-08-2022 | வியாழன் | 2ம் திருவிழா | திருநடனம் | சிவகுமார்,வனஜா கந்தசாமி குடும்பம் |
| 19-08-2022 | வெள்ளி | 3ம் திருவிழா | கார்த்திகை | நிரஞ்சன் பொன்னம்பலம்,<br>உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 20-08-2022 | சனி | 4ம் திருவிழா | தண்டபாணி | சொர்ணலிங்கம் மகாலிங்கம் குடும்பம் |
| 21-08-2022 | ஞாயிறு | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 22-08-2022 | திங்கள் | 6ம் திருவிழா | மஞ்சம் | சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 23-08-2022 | செவ்வாய் | 7ம் திருவிழா | வேட்டை | பாஸ்கரன் கணேசானந்தன் |
| 24-08-2022 | புதன் | 8ம் திருவிழா | சப்பறம் | பிரதீபன் பாபநாசசிவம் கிருட்டிணர் குடும்பம் |
| 25-08-2022 | வியாழன்காலை | 9ம் திருவிழா | தேர் | விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| 25-08-2022 | வியாழ மாலை | இரவுத்திருவிழா | தேரடி | மதனிக்கா குணேந்திரன் |
| 26-08-2022 | வெள்ளி காலை | 10ம்திருவிழா | 1008 சங்காபிஷேகம் | அசோக்குமார் வேலாயுதம் |
| 26-08-2022 | வெள்ளி மாலை | இரவுத்திருவிழா | சுவாமி வீதியுலா | |
| 27-08-2022 | சனி காலை | | பிராயச்சித்தம் | வல்லிபுரம் கணேசன் |
| 27-08-2022 | சனி மாலை | மாலை | திருக்கல்யாணம் | செந்தில்குமரன் ஆனந்தன் |
| 28-08-2022 | ஞாயிறு மாலை | மாலை | வைரவர்மடை | சிவா சின்னத்தம்பி குடும்பம் |

**கற்பூரச்சட்டி,பால்குடம், காவடி எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவுசெய்யவும்**

www.jeyadhurgatemple.com 1808 Drew Road, Mississauga, ON.L5S 1J6. 905-612-1856

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்! 10,000+



இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.

**மணமகள் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 29 வயது வேளாளர், Bachelors degree, Trading associate மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகள் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 33 வயது வேளாளர், Diplpma, own business மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகள் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 30 வயது வேளாளர், Bachelors degree, Medical Administration மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

- 416 477 6854
  416 477 2259
  647 709 1536
- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri 10AM to 7PM
Sat 1PM to 7PM

www.friendsmatrimony.com

# புலம்பெயர்ந்த தமிழர்களால் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க முடியுமா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

கடந்த இரு தசாப்த கால அனுபவத்தின்படி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் ஜனநாயகவெளி ஒப்பீட்டளவில் அதிகரிப்பதுண்டு. எனினும் இம்முறை அவர் அதிர்ஷ்டலாபச் சீட்டில் ஜனாதிபதியாக வந்ததும் தென்னிலங்கையில் ஜனநாயக வெளி ஒப்பீட்டளவில் சுருங்கியது எனலாம்.

மக்கள் எழுச்சிகளின் காரணமாக அந்த வெளி கடந்த மூன்று மாதங்களாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு அதிகரித்து வந்தது. ஆனால் ரணில் அதைச் சுருக்கி விட்டார். அரகலயவை முறியடிப்பதில் அவர் முதற்கட்ட வெற்றியைப் பெற்றிருக்கிறார். அதனால் அவசர காலச் சட்டத்தைத் நீக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

இவ்வாறு தென்னிலங்கையில் மக்கள் எழுச்சிகளின் விளைவாக அதிகரித்து வந்த ஜனநாயக வெளியைக் குறுக்கிய ஒருவர், எப்படித் தமிழ்மக்களுக்கு ஜனநாயக வெளியை அதிகப்படுத்துவார் என்று எதிர்பார்ப்பது? ஆனால் தென்னிலங்கை நிலவரமும் தமிழ்ப் பகுதிகளின் நிலவரமும் ஒன்று அல்ல. தென்னிலங்கையில் போராட்டத்தை தொடர்ந்து அனுமதித்தால் ரணில் தன்னுடைய ஆட்சியை பாதுகாக்க முடியாது.


அதேசமயம் தமிழ் பகுதிகளில் அவ்வாறான போராட்டங்கள் எவையும் இடம் பெறவில்லை. மேலும் ஜெனிவாக் கூட்டத்தொடரை நோக்கி அவ்வாறு தமிழ் மக்களின் அரசியலில் ஜனநாயக வெளியை அதிகப்படுத்த வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. கடந்த நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் அவர் அதைச் செய்தார். அவர் திறந்து விட்ட அதிகரித்த ஜனநாயக வெளிக்குள் தான் தமிழ் மக்கள் பேரவை எழுச்சி பெற்றது, இரண்டு எழுக தமிழ்கள் இடம் பெற்றன.

இம்முறையும் அவர் அவ்வாறு தமிழ் மக்களுக்கு ஜனநாயக வெளியை அகலப்படுத்துவாரா என்று பார்க்க வேண்டும். கடந்த வாரம் அவர் சில புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடைகளை அகற்றினார்.அதை அவர் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக் காலத்திலும் செய்தார். அதை வைத்து அவர் ஜனநாயக வெளியை அதிகப்படுத்துகிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா? இல்லை.

ஏனென்றால் புலம்பெயர் தமிழர்கள்– தமிழ் டயஸ்பொறா இப்பொழுது நாட்டுக்குத் தேவை. புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டில் முதலீடு செய்தால் நாட்டின் செல்வச் செழிப்பை அதிகப்படுத்தலாம். நாடு இப்பொழுது எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் தேவை என்பதனை ரணில் மட்டுமல்ல கோட்டாபயவும் ஏற்றுக் கொண்டிருந்தார்.

தமிழ் டயாஸ்போற எனப்படுவது தட்டையான, ஒற்றைப்படையான ஒரு சமூகம் அல்ல. அதில் பல அடுக்குகள் உண்டு. இப்பொழுது தடை நீக்கப்பட்ட எல்லா அமைப்புகளும் நபர்களும் முழுத்தமிழ் டயஸ்போறவையும் பிரதிபலிக்கிறார்களா என்ற கேள்வி உண்டு. மேலும், ராஜபக்சவால் தடை செய்யப்பட்ட உலகத்தமிழர் அமைப்பின் தலைவரான மதகுரு யாழ்ப்பாணத்தின் தெருக்களில் லேடிஸ் பைசிக்கிளில் வழமை போல நடமாடினார்.

அவர் விடயத்தில் தடை ஒரு நடைமுறையாகவே இருக்கவில்லை. எனவே தடை நீக்கமும் அவ்வாறு சம்பிரதாயபூர்வமானதா? எதுவாயினும், ,இதுதொடர்பில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் என்ன செய்ய வேண்டும்?



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY

අංක 2291/02 - 2022 අගෝස්තු මස 01 වැනි සඳුදා - 2022.08.01
No. 2291/02 - MONDAY, AUGUST 01, 2022

(Published by Authority)

PART I : SECTION (I) — GENERAL

L.D.B. 7/2001(IV)

THE UNITED NATIONS ACT, NO. 45 OF 1968

Amendment to the List of Designated Persons under Regulation 4(7) of the United Nations Regulations No. 1 of 2012

The List of Designated Persons published in the *Gazette* Extraordinary No. 1992/25 of November 9, 2016, is hereby amended by the repeal of the Schedules thereto and the substitution therefor of the following Schedules.

General Kamal Gunaratne (Retd),
WWV RWP RSP USP ndc psc MPhil,
Secretary,
Ministry of Defence,
Competent Authority.

Colombo,
28th July, 2022.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டில் முதலீடு செய்வதற்கு முண்டியடித்துக் கொண்டு வரத்தேவையில்லை. நிதானமாக முடிவெடுக்கலாம். இந்த அரசாங்கமும் ஒரு நாள் மாறும். மாறும் போது எப்படி கோட்டாபய வந்ததும் ரணில் தடை நீக்கிய அமைப்புக்கள், தனி நபர்கள் மீண்டும் தடை செய்யப்பட்டார்களோ, அப்படி இந்த நிலையும் மாறலாம். எனவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் ஆட்சி மாற்றங்களைக் கண்டு மயங்கத் தேவையில்லை.

மாறாக இந்த சந்தர்ப்பத்தை வெற்றிகரமாகக் கையாண்டு எப்படி ஒரு அரசுக் கட்டமைப்பு மாற்றத்துக்கான பேரத்தைப் அதிகப்படுத்தலாம் என்று சிந்திக்க வேண்டும். தமிழ் முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவது என்று சொன்னால் அதற்கு ஓர் அரசியல் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களை நாட்டின் பொருளாதாரத்தில் பங்காளிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது தமிழ்மக்களை முதலீட்டாளர்களாக இணைப்பதற்கு பதிலாக தமிழ் மக்களை அரசியற் பொருளாதாரப் பங்காளிகளாக இணைக்க வேண்டும். அதற்கு முதலில் அரசியல் தீர்வு ஒன்று வேண்டும்.அரசுக்கட்டமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

இப்பொழுது முதலீடு செய்தவர்கள் சில ஆண்டுகளின் பின் அவற்றை திருப்பி எடுத்துக் கொள்ளும் ஒரு நிலைமை வரக்கூடாது. எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வு தரப்படாத ஒரு பின்னணிக்குள் புலம் பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் கண்ணை மூடிக் கொண்டு ரணிலின் அழைப்பை ஏற்கத் தேவையில்லை.

பதிலாக இத்தருணத்தை பயன்படுத்தி ரணில் விக்ரமசிங்கவின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம். ஒரு தீர்வை முதலில் கொண்டு வாருங்கள், அதற்குரிய நல்லெண்ண சூழலை முதலில் உருவாக்குங்கள். உதாரணமாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குங்கள், கைதிகளை விடுதலை செய்யுங்கள், காணிகளை விடுவியுங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிவாரணத்தை வழங்குங்கள். இவற்றின் மூலம் ஒரு நல்லெண்ண சூழலை பயமற்ற சூ ழலை ஏற்படுத்துங்கள். அதைத் தொடர்ந்து அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குங்கள். அதில் புலம்பெயர்ந்த தமிழர்களையும் பங்காளிகள் ஆக்குங்கள். ஒரு தீர்வு கிடைக்கட்டும். அதன் பின் நாங்கள் முதலீடு செய்கிறோம் என்று நிபந்தனை விதிக்கலாம்.

தமிழ்மக்கள் ஏன் புலம்பெயர்ந்தார்கள்? ஏனென்றால் நாட்டுக்குள் பாதுகாப்பு இல்லை என்பதனால ̇தான். கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக தென்னிலங்கையில் தமிழ் மக்களின் சொத்துக்களை குறிவைத்து தாக்குதல்களை நடத்தப்பட்டன. அதுதான் பின்னாளில் முஸ்லிம்களுக்கும் நடந்தது. தென்னிலங்கையில் சிங்களவர்கள் அல்லாத ஏனைய இனங்கள் நிதி ரீதியாக செழித்தோங்குவதைக் கண்டு சகிக்க முடியாத ஒரு கூட்டு மனோநிலை சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்திடம் உண்டு. அது இப்பொழுது மாறி விட்டதா?

அந்த மனநிலையின் விளைவாகத் தான் தமிழ் மக்கள் நாட்டின் பொருளாதாரத்தில் பங்களிக்காத ஒரு நிலை அதிகரித்தது. ஆனால் புலப்பெயர்ச்சியானது சிங்கள பெருந்தேசியவாதம் கற்பனை செய்ய முடியாத வேறு ஒரு வளர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. புலம் பெயர்ந்து சென்ற சென்ற தமிழர்கள் புலம் பெயர்ந்து சென்ற நாடுகளில் மிக விரைவாக தங்களை ஸ்தாபித்துக் கொண்டார்கள். நிதி ரீதியாக செழித்தோங்கினார்கள். சில தசாப்தங்களுக்கு முன்பு ரூபாய்களோடு முதலாளிகளாக காணப்பட்டவர்கள், புலம்பெயர்ந்த பின் டொலர்களை விசுக்கும் பெரு வணிகர்களாக மாறினார்கள். எந்தத் தமிழர்களை தென்னிலங்கையில் இருந்து அகற்ற வேண்டும் என்று திட்டமிட்டு இன அழிப்பு முன்னெடுக்கப்பட்டதோ, அதே தமிழர்கள் இப்பொழுது கொழும்புக்கு திரும்பி வந்து தனது டொலர்களால் காணிகளையும் கட்டிடங்களையும் விலைக்கு வாங்குகிறார்கள். சிங்கள மக்கள் விற்கும் காணிகளை வாங்கி அங்கெல்லாம் அடுக்குமாடித் தொடர்களைக் கட்டி வருகிறார்கள். இங்கே ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

எதிரிசிங்க குரூப் ஒஃப் கொம்பனி என்று அழைக்கப்படும் ஒரு பிரம்மாண்டமான வணிக நிறுவனம் தென்னிலங்கையில் வந்துரோத்து நிலையை அடைந்தது. நூற்றுக்கணக்கான நகைக்கடைகள், சுவர்ணவாகினி என்று அழைக்கப்படும் ஊடக நிறுவனம் போன்றவற்றைச் சொந்தமாக கொண்டிருந்த எதிரிசிங்க குரூப் ஒஃப் கொம்பனி வங்குரோத்தான போது அதை புலம்பெயர்ந்து வாழும் ஒரு தமிழ் பெரு வணிகர் விலைக்கு வாங்கினார். அவர் ஏற்கனவே ஒரு ஊடகப் பெரு வணிகரும் ஆவார்.

இவ்வாறு தென்னிலங்கையில் வங்குரோத்தாகும் கொம்பனியை விலைக்கு வாங்கும் அளவுக்கு தமிழ் மக்கள் நிதி ரீதியாகப் பலம் மிக்கவராக காணப்படுகிறார்கள். புலப்பெயர்ச்சி தமிழ் மக்களை ஒரு விதத்தில் சிதறடித்திருக்கிறது. இன்னொரு விதத்தில் உலகில் மிகவும் கவர்ச்சியான, பலம்வாய்ந்த ஒரு டயஸ் பொறவை உருவாக்கியிருக்கிறது. இந்த வளர்ச்சியை சிங்களபௌத்த பெருந்தேசியவாதம் கணித்திருக்கவில்லை. அதன் விளைவாகத் தான் புலம்பெயர்ந்த தமிழர்களை நாட்டில் முதலீடு செய்யுமாறு கோட்டாவும் கேட்டார். இப்பொழுது ரணிலும் கேட்கிறார்.

மேலும் ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தான். எனவே அவர்களோடு சுமுகமான உறவை வைத்துக் கொள்வதன்மூலம், அரசாங்கம் ஜெனிவாவில் தனக்கு ஏற்படக்கூடிய நெருக்கடியின் அளவைக் குறைக்கலாம்.

ஆனால் எதுகாரணமாக தமிழ்மக்கள் நாட்டின் பொருளாதாரத்தில் முழு அளவுக்குப் பங்களிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டதோ,அக்காரணங்களை அகற்ற ரணில் விக்ரமசிங்க தயாரா என்ற கேள்விக்கு விடை இல்லாமல் புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டில் முதலீடு செய்ய முன்வரக்கூடாது. அதுபோலவே ஜெனிவாவில் அரசாங்கத்தின் மீது நெருக்கடியைப் பிரயோகிக்கும் செய்முறைகளையும் நிறுத்தக் கூடாது.

இந்த விடயத்தில் புலம் பெயர்ந்த தமிழர்கள் முதலில் ஓர் அமைப்பாகத் திரள வேண்டும். அதன்பின் அந்த அமைப்பானது அனைத்துலகை வழமைகளின் ஊடாக அரசாங்கத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்பொழுது இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு முக்கிய முன் நிபந்தனையாக முன்வைக்கலாம். தனித்தனி அமைப்பாக தனிநபர்களாக அரசாங்கத்தோடு டீல்களுக்குப் போவதற்கு பதிலாக ஒரு அமைப்பாகத் திரண்டு அதைச் செய்ய வேண்டும்.குறிப்பாக ரணில் விக்ரமசிங்க டயஸ்போறாவை பிரித்துக் கையாள வாய்ப்பளிக்கக்கூடாது.

நாட்டுக்குள் முதலீடு செய்வது என்பது இலங்கைத்தீவின் பொருளாதாரத்தில் டயஸ்பொறா ஒரு பங்காளிகளாக மாறுவது என்ற பொருளில் அல்ல. அதைவிட ஆழமான பொருளில் ,தமிழ்த்தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற நீண்ட கால நோக்குநிலையிருந்தே திட்டமிடப்பட வேண்டும்.

அதாவது முதலீட்டின் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவது .யூதர்கள் கடந்த நூற்றாண்டில் அவ்வாறு முதலீட்டின் மூலம் ஒரு தேசத்தை இஸ்ரேலைக் கட்டியெழுப்பினார்கள். எனவே புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் இலங்கைத்தீவின் பொருளாதாரத்தில் பங்காளிகளாவது என்று சொன்னால், அதைத் தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற உள்நோக்கத்தோடு திட்டமிடவேண்டும்.


கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வளர்ச்சிக்காக
நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளும் இராப்போசன விருந்தும்
SEP 3 SAT
6:00 PM
Nritya Dance Company
Amirthalaya Academy of Fine Arts
Smt. Lalithanjana Kathirgaman
SINGER
HARI KARA SUTHAN
SUPER SINGER
SARIKA
SUPER SINGER
SINMAYE
SENTHURAN
ALAGAIYA
Natiyakalai
Art Of Bharathanatyam
இராகமழை 2022
Sringeri Hall
80 Brydon Dr, Etobicoke, ON M9W 4N6
416-213-0110
TICKETS $100
FOR FAMILY OF 4
www.shrimuththumaari.com
Facebook / Canada Shri Muththumaari Amman


All Your Real Estate Needs....
JEYA Saam
Sales Representative
416.262.1400
RE/MAX COMMUNITY
1265 Morningside Ave Suite 203
Bus: (416)287-2222


KS
Window Coverings
Residential & Commercial
Sangeetha Kannan
416 270 9643 647 289 6483


Kannan Narayanasamy
416.556.9494
RE/MAX COMMUNITY
www.kannahomes.com


Cherrycrest
DENTAL CENTRE
905-913-0055
25 Cherrycrest Drive, Unit 5,
Brampton, ON L6P 3W4
Dr. M. Sathiyabalan


Buying, Selling, Leasing or Investing?
Jay Sritharan
Salesperson
Dir: 647.569.9392| Off: 416.581.8000
jaysri@upstaterealty.ca
TEAM RON CHATHA


Amazing
Electric Motors Ltd.
Kenney Nithiy | 416-291-7342 | 416-540-8878
www.amazingelectric.ca | 450 Passmore Ave, Unit 19


TEAM WIGNA
Wigna Sivapathasundaram
416.317.8449
wigna@teamwigna.ca
RE/MAX COMMUNITY


Vimalraj Vimalathasan
FRAMEXPRESS
BASEMENT FRAMING
Tel: 343-987-1299
Framexpress@outlook.com


WINNER STAFFING SOLUTION
PRABHU
PRESIDENT/CEO
Cell: 647-667-7006 (24Hrs)


TORONTO BLUES SPORTS CLUB


ஊடக அனுசரணை
ANALAI EXPRESS
ஈழநாடு
CTR
416-841-9600


CANADA SHRI MUTHTHUMAARI AMMAN TEMPLE
POOJA TIMING :
MORNING 9:30 A.M.
AFTERNOON 12:00 P.M.
EVENING 7:30 P.M.
Opening Hours :
Morning 9am - 1pm
Evening 5pm - 9pm
www.shrimuththumaari.com
Facebook / Canada Shri Muththumaari Amman
1771 ALBION ROAD, UNIT #1, TORONTO ONTARIO, CANADA M9W 5S7


BS.KISHOR
Transportation
Call Babu
647.654.3814


CENTUM
Advance Realty Inc.
Thusi Sivarajah
Mortgage Consultant
416.837.1549
BEST MORTGAGE RATE IN TOWN


SP Auto Collision Ltd.
FREE ESTIMATE
BEST PRICE IN GTA
PRASANTH
647-701-5083
prasanthca@hotmail.com
124 Manville Rd, Scarborough, ON M1L 4J5


TOYOTA
Don Valley North Toyota Scion
Shan Manojkumar


Esan Beauty Salon
Ladies | Gents | Kids


Best Caters in Town
416 - 626 - 8421




Window Glass & Door Services


தேவி நகை மாளிகை
DEVI JEWELLERYS
Tel: 416-850-9101
2625 Eglinton Ave E Scarborough, ON M1K 2S2


UTHAYA'S
SUPER MARKET


SAMY & SONS


EAZY CARRY
TAKE OUT RESTAURANT
Depths of Srilankan & South Indian Cuisine


SOORIYA
DECORATION
416 588 9904
416 454 8799


TKN


GOLDEN SUPPLIES


Three Star Auto


ANANDBPAVAN RESTAURANT
5310 Finch Ave E #24
416-885-0450

# இலங்கை:- “திக்கற்ற பார்வதி”

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



திக்கற்ற பார்வதி என்றொரு திரைப்படம் 1970களின் முற்பகுதியில் வந்திருந்தது. இன்றைய இலங்கையின் நிலையும் ஏறக்குறைய அந்தத் திக்கற்ற பார்வதியின் நிலையைப் போன்றது தான்.

அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்று ஒரே குழப்பத்துக்குள்ளாகியுள்ளது நாடு. இதற்குள் வெளி அழுத்தங்கள் வேறு. சீனக் கப்பலை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்ற இந்திய அழுத்தம். இந்த விடயத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கத் தரப்பு. கடன் மறுசீரமைப்புத் தொடக்கம் எதிர்கால பொருளாதார. அரசியல் உறவு வரை எப்படி அமையும் என்பதை இந்தக் கப்பலைக் கையாள்வதைப் பொறுத்தே தீர்மானிக்க முடியும் என்று சொல்லும் சீனா. ரணில் அரசு தற்போதைக்கு சமாளித்திருக்கிறது போலும்.

இப்படி பல பக்கங்களாலும் ஒரே நேரத்தில் இடிபட்டுக் கொண்டிருக்கிறது இலங்கை. இது எப்படியிருக்கிறது என்றால்...

ஆ ஈன, மழை பொழிய, இல்லம் வீழ
அகத்தடியாள் மெய் நோக, அடிமை சாக
மா ஈரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்து வரச், சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்டுக்
குருக்கள் வந்து தட்சணை கொடு
என்றாரே!'' — என்பதைப் போல.

இந்த நிலையை எப்படி எதிர் கொள்வது என்று எவருக்குமே தெரியவில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்க தான் இப்பொழுது ஒரேயொரு மீட்பராகவும் காப்பராகவும் உள்ளார். விரும்பியோ விரும்பாமலோ அவரை நம்பித்தான் தஞ்சமடைந்திருக்கின்றனர் அனைவரும். அதாவது அவரை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் என அனைவரும்.

ஆனால், படு குழியிலிருக்கும் இலங்கையை ரணில் விக்கிரமசிங்க என்ற ஒன்றை மனிதரால் விரைவில் மீட்டெடுக்க முடியுமா? என்ன தான் அதிகாரமுடைய ஜனாதிபதியாக அவர் இருந்தாலும் அவருக்கும் வரையறைகள் எல்லைகள் உண்டல்லவா. அவரொன்றும் மாயாவி அல்லவே!

அப்படித் தான் அவர் ஒரு சாகஸ நாயகனமாக மாறினாலும் அதற்கு உள்நாட்டிலும் வெளிச் சூழலிலும் சாதகமான நிலைமைகள் இருக்குமா? போதிய ஆதரவு கிட்டுமா?

அரசியலமைப்பின் படியும் கள யதார்த்தத்தின்படியும் இன்னும் பாராளுமன்றமே வலுவானதாக இருக்கிறது. ஜனாதிபதியைக் கூட அது ஒரு கட்டத்தில் கட்டுப்படுத்தலாம். என்றபடியால் தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான ஆதரவையும் பாராளுமன்றமே— பெரும்பான்மையாக இருக்கும் பொதுஜன பெரமுனவே — வழங்குகிறது. நாளை இதே தரப்புகள் எதிர்க்கட்சிகளோடு இணைந்து ரணிலைச் சுற்றி வளைக்கவும் கூடும்.

ஆகவே தான் மிக அவசரமாக தன்னைப் பலப்படுத்துவதற்காக ரணில் சர்வகட்சி அரசாங்கத்தை அனைத்துக் கட்சிகள் இணைந்த ஆட்சியை உருவாக்க முயற்சிக்கிறார்.

இது ரணில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வியூகம் என்று சொன்னாலும் இதைத் தவிர்த்து அவருக்கோ நமக்கோ வேறு வழியுமில்லை.

இப்படியான ஒரு நிலையில்தான் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வையும் காண வேண்டும் என்ற அவசர நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ஆனால், இதை எழுந்தமானமாக நினைத்த மாத்திரத்தில் நிறைவேற்றி விட முடியாது. மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக இதைச் சுருக்கிக் கொண்டு எதையும் செய்யவும் முடியாது.

ஏனென்றால் இலங்கையின் பிரச்சினைகள் ஒன்றோடு ஒன்று தொடர்பானவை. ஒன்றின் விளைவாக ஒன்றென ஒவ்வொன்றாக உருவாகிப் பெருகியவை. ஒவ்வொன்றுக்குமான தீர்வை உரிய



காலத்தில் உரிய முறையில் காணத் தவறியதன் விளைவே இன்றைய சீரழிந்த —அபாய நிலைமையாகும்.

ஆகவே இதைத் தீர்க்க வேண்டும் என்றால் அதற்குரிய அடிப்படைகளை நோக்கி துணிச்சலோடு ஜனாதிபதி நகர வேண்டும். அதாவது அதற்குரிய அடிப்படைகளில் செயற்பட வேண்டும். இந்தச் செயற்படு களத்தில் அனைத்துத் தரப்பும் இணைந்து கொள்வது அவசியம்.

ஆனால் அப்படிச் செயற்படுவதற்கான எந்த முஸ்தீபுகளையும் காண முடியவில்லை. பதிலாக குறுக்கு வழியில் இலக்கை எட்டிவிடலாம் என்ற தந்திரோபாயத்தையே பின்பற்றப் பார்க்கின்றது அதிகாரத் தரப்பு. கடந்த காலங்களிலும் இப்படித்தான் நடந்தது.

குறுக்கு வழியில் உடனடித் தீர்வைக் காண்பதையே வழி முறையாகக் கொண்டு பழகிய இலங்கையின் அதிகாரத் தரப்புக்கு அடிப்படைப் பிரச்சினையை இனங்கண்டு, அதைத் தீர்க்கும் எண்ணம் இருந்ததில்லை. உதாரணமாக இனப் பிரச்சினையின் விளைவாக உருவாகிய போரை முடித்து விட்டால் எல்லாமே சரியாகும் என்று எண்ணியதைப் போன்றதே இதுவும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது உண்மை தான். ஆனால் அதன் தொடக்கப் புள்ளியான இனப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இப்பொழுது அது வேறு பல வடிவங்களில் பெருத்திருக்கிறது. காணாமல் போனோர் விவகாரமாக, படைத்துறைச் செலவீனமாக, போர்க்குற்றமாக, அரசியலமைப்புத் திருத்தப் பிரச்சினையாக... பொருளாதார நெருக்கடியாக.... இப்படிப் பலவாக.

இதைப் போன்றதே நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு பற்றாக்குறைக்கு வரவு செலவுத்திட்டத்தில் விழுகின்ற துண்டு விழும் தொகைக்கு குறைநிரப்புப் பிரேரணை மூலம் கடன் வாங்கிச்செலவு செய்து அப்போதைய நிலைமையை ஒவ்வொரு தரப்பும் சமாளித்தது. அதாவது கடன் வாங்கி நிலைமையைச் சமாளித்ததாகும். அதிலும் முக்கியமாக முதற் பட்ட கடனுக்கு வட்டி கட்டு வதற்காக பிறகும் பிறகும் கடன் வாங்கிச் சமாளித்த திருக்கூத்தெல்லாம் நடந்தது. இதைப் பற்றி பலருக்கும் தெரியும். ஆனால் இது ஒரு நாளைக்கு வெடிக்கும். படு சீரியஸான நிலைக்குப் போகும் என்று எந்த விண்ணரும் கற்பனை கூடச் செய்யவில்லை.

இப்பொழுது எல்லாமே வந்து இறுகி விட்டன. இதிலிருந்து விடுபட வேண்டும் என்றால் ஒரேயொரு வழிதான் இருக்கிறது. அது தான் IMF என்ற அபயக் கடவுள் என்கின்றனர் நண்பர்கள். ஆம், இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டும் என்றால் ஐஆகு விடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று பல்வேறு தரப்பினராலும் சொல்லப்படுகிறது.

அரசாங்கமும் இதே வழியில்தான் தீவிரமாகப் பயணிக்க முயற்சிக்கிறது. ஜனாதிபதி மட்டுமல்ல, சில அமைச்சர்களும் இதற்கான தீவிர பரப்புரைப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சொல்கின்ற முதல் நியாயம், 199 அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன இனி இயங்க முடியாத நிலைக்குள்ளாகி விட்டன என்பதாகும். இதைப்பற்றி தினமும் பத்திரிகையாளர் சந்திப்புகளில் ஒப்புவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிறுவனங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததே இவர்கள் தானே!

தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக அளவுக்கதிகமாக ஆள் நியமனங்களைச் செய்து திணித்தது. தமக்கிசைவான முறையில் நிர்வாகத்தை வளைத்து நெளித்தது, ஊழல்களைச் செய்தது பொருத்தமில்லாத நடைமுறைகளை உருவாக்கியது போன்ற பொருத்தமற்ற காரியங்களைச் செய்து இந்த நிலைக்கு இவற்றைக் கொண்டு வந்து விட்டு இப்பொழுது நட்டத்தில் இருப்பதால் அவற்றை விற்போம் என்றால் சரியா? நட்டமும் கடனும் தான் நாட்டின் விதியா?

இப்பொழுது இதிலிருந்து தப்ப வேண்டும் என்றால் ஒரேயொரு காத்தற் கடவுள் தான் உள்ளது. ஒரேயொரு மீட்பர் தான் உண்டு என்று IMF இடம் சரணாகதி அடையச் சொன்னால் இதை எப்படி ஏற்றுக் கொள்வது?

இல்லை, இந்தக் கட்டத்தில் வேறு எதுவுமே செய்ய முடியாது. நாங்கள் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் க்யூவில் நிற்க முடியாது. அதை விட ஐஆகு விடம் போவது பரவாயில்லை என்றால்... அதுவும் நல்லது தான். ஏனென்றால் மக்களும் சரி, நாட்டின் தலைவர்களும் சரி கடன்பட்டு கடன் பட்டே (பிச்சையெடுத்து) பழகியவர்கள். அதனால் இப்போதும் அதற்கே எந்தத்த தயக்கமும் இன்றி முயற்சிக்கின்றனர். அதைத் திருப்பிச் செலுத்துவதைப் பற்றியோ, செலுத்தாத கடனுக்குப் பதிலாக என்ன நடக்கும் என்பதைப் பற்றியோ எந்தச் சிங்கனும் சிங்கியும் சிந்திக்கவேயில்லை. ஆனால், எந்த விதமான முன் யோசனையும் இல்லாமல் IMF வரவேணும் என்று சொல்கிறார்கள்.

அன்பர்களே! IMF புகுந்த நாடுகள் எங்கேயாவது, ஏதாவது உருப்பட்டிருக்கிறது என்று எவராலும் சொல்ல முடியுமா? சிலர் சொல்கிறார்கள் 1991இல் இந்தியா IMF விடம் சென்றது தானே. அதற்குப் பிறகு தானே இந்தியப் பொருளாதாரம் விருத்தியடைந்தது என.

ஆனால் அதற்கு இந்தியா தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டே IMF விடம் சென்றது. எங்கள் நிலைமை?

அப்படித்தான் IMFவின் உதவிகளைப் பெறுவதாக இருந்தாலும் அந்தக் கடனுதவிகளை எப்படிப் பயன்படுத்துவது? அதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை —உற்பத்தியை எப்படிக் கட்டியெழுப்புவது? இதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு விட்டனவா? அதற்கு இதைச் சுயாதீனமாகத் திட்டமிடுவதற்கு IMF அனுமதிக்குமா? ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் உண்டா? மத்திய வங்கியின் விதிமுறைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் எண்ணமுண்டா? நாட்டை மீளமைப்பதற்கான ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்கள் ஏதும் தயார்ப்படுத்தப்படுகிறதா? இப்படி எதையும் செய்யாமல், எதைப் பற்றிய தெளிவும் இல்லாமல் அப்படியே IMF வின் நிபந்தனைகளுக்குக்கட்டுப்பட்டுச் செயற்படுவது, அதன் காலடியில் விழு வது என்பது நாட்டை மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும். இதைப் பற்றி யாருக்குமே தெரியாதா? நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை. ஜனநாயக மறுசீரமைப்பு வேண்டும் என்பது தொடக்கம் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுவாக்கம் விற்க வேண்டும் என்பது வரை பெரிய பில்டாவையெல்லாம் செய்து கொண்டிருக்கிறது IMF. அதனுடைய குணமே இதுதான்.

எப்படியோ இதையெல்லாம் கடந்து IMF விடம் நாடு அடகு வைக்கப்படப் போகிறது. சீனக் கடனுக்கும் IMF வின் கடனுக்குமிடையில் என்ன வேறுபாடுண்டு? என்றொரு நண்பர் கேட்டதை இங்கே பதிவிடலாம். இரண்டுமே பொறி தான்.

குருக்கள் தவறு செய்தால் குற்றமில்லை என்பதைப்போல ரணில் தலைமையிலான அரசாங்கம் செய்தால் எதுவும் தப்பாக இருக்காது. அல்லது அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்றே பலரும் கருதுகிறார்கள்.

இப்படித் தான் 1977இல் திறந்த பொருளாதாரக் கொள்ளையை மன்னிக்கவும் கொள்கையை அப்போதைய ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் கொண்டு வந்தபோது பலருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.


அது நாட்டுக்கு உண்டாக்கிய வீழ்ச்சியைத் தான் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அதைப் போல ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய சகபாடிகளும் இப்பொழுது கொண்டு வரும் IMFவும் நாளைய இலங்கையை படு குழியில் தான் தள்ளும்.

இதைப் பற்றி உங்களுக்கு வேறேதானும் புரிதலும் அறிதலும் இருந்தால் சொல்லுங்கள் தோழர்களே! ஆனாலும் நாம் விரும்பினால் என்ன விரும்பாது விட்டால் என்ன IMF வந்தே தீரும். அதற்கான பூர்வாங்க வேலைகள் எல்லாமே முடிந்து விட்டன. இனிப் பெற்றோலில் நெருப்புப் பற்றியதைப் போல எல்லாமே கடகடவென்று நடக்கத் தொடங்கி விடும். இதற்குள் நம்முடைய தலைகளை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது? ஆம், யாருடைய எலிகள் நாம்?

# இந்திய - இலங்கை உறவுகளில் சீனா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



இலங்கையும் இந்தியாவும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளவாறு நாணயத்தின் இரண்டு பக்கங்களும் ஒன்றாகத் தான் பயணிக்க வேண்டும். ஆனால், இலங்கையும் இந்தியாவும் ஒன்றாகப் பயணிப்பவை அல்ல

பெரும் சர்ச்சையை கிளப்பிய சீன ஆய்வுக் கப்பலான யுவான் வாங் 5 அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடைவதற்கு 24 மணித்தியாலங்கள் முன்னதாக, இந்தியாவிடம் இருந்து டோனியர் கண்காணிப்பு விமானத்தைப் பெற்றுக் கொண்ட நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்திய உரை பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.

அவர் தனது உரையில், இலங்கையும் இந்தியாவும், ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றும், ஒரே குணாம்சங்களைக் கொண்ட நாடுகள் என்றும், இரு நாடுகளுக்கும் தனியான பயணம் கிடையாது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்னரான ஒரு மாத காலத்திலும் சரி, அவர் முன்னர் பிரதமராக இருந்த காலகட்டத்திலும் சரி, அவ்வாறான நிலைப்பாட்டுடன் இந்தியாவை அணுகினாரா என்ற கேள்வி இருக்கிறது. வரலாறு இந்தியாவையும் இலங்கையையும் ஒன்று சேர்த்திருப்பதால் எதிர்காலத்திலும் தொடர்ந்து ஒன்றாக பயணிக்க வேண்டும். பிராந்தியம் மற்றும் உலக நாடுகளின் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவின் யுவான் வாங்-5 கப்பல் விவகாரத்தில் அவ்வாறான நிலைப்பாட்டில் நடந்து கொண்டிருப்பதாக கூறமுடியாது.

ஏனென்றால், சீனாவின் ஏவுகணை மற்றும் செய்மதி வழித்தட கண்காணிப்பு கப்பலான யுவான் வாங் -5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தருவதை இந்தியா விரும்பவில்லை. இந்தியா அதனை பகிரங்கமாகவும், இரகசியமாகவும் குறிப்புணர்த்தியும் இலங்கை அரசாங்கம், சீனக் கப்பலுக்கான அனுமதியை தாமதப்படுத்தியதே தவிர, தடுத்து நிறுத்தவில்லை.

இலங்கையும் இந்தியாவும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்றாலும், நாணயத்தில் இரண்டு பக்கங்களும் ஒன்றாக இருப்பதில்லை. ஒரு பக்கம் தலையும், இன்னொரு பக்கம் பூவுமாகத் தான் உள்ளது.

ஆனாலும் இரண்டும் இருந்தால் தான் அந்த நாணயம் செல்லுபடியாகும். இரண்டும் தலையாகவோ, இரண்டும் பூவாகவோ இருந்தால், அது செல்லாத நாணயம். ரணில் விக்கிரமசிங்க கூறியபடி நாணயத்தின் இரண்டு பக்கங்களும் ஒன்றாகத் தான் பயணிக்க வேண்டும். ஆனால், இலங்கையும் இந்தியாவும் ஒன்றாகப் பயணிப்பவை அல்ல.

சீனாவை பகையாகப் பார்க்கிறது இந்தியா. ஆனால் சீனாவை பரம்பரை நண்பனாக கருதுகிறது இலங்கை. பாகிஸ்தானுடன் விரோத நிலைப்பாட்டை இந்தியா கொண்டிருந்தாலும், இலங்கையுடன் அது நெருங்கிய நட்பை பேணுகிறது.

சர்வதேச உறவுகள் விடயத்தில் இலங்கையும், இந்தியாவும் ஒத்த நிலைப்பாட்டில் இருப்பதாக கருத முடியாது.

இரண்டு நாடுகளும் இறைமையுள்ளவை என்பதால், சர்வதேச உறவுகள் விடயத்தில் ஒத்த நிலைப்பாட்டைக் கொண்டவையாக இருக்க வேண்டும் என்பது நியதியல்ல. ஆனால் ஒத்த நிலை நாடுகள், ஒன்றாகப் பயணிக்க வேண்டியவை என்றால், ஒன்றையொன்று புரிந்து கொள்வது முக்கியம்.

இலங்கையும் சரி இந்தியாவும் சரி, எப்போதும் தங்களின் கரிசனைகளையும், கவலைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை என்பது இரண்டு நாடுகளினதும் கொள்கை வகுப்பாளர்களின் கருத்து.



1987இந்திய இலங்கை உடன்பாட்டை, இந்தியா தனக்குச் சாதகமானதாக மாற்றிக் கொண்டது என்ற கருத்து இன்றைக்கும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இருக்கிறது.

அதனை தங்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு உடன்பாடாகத் தான், அவர்கள் கருதுகிறார்கள். இலங்கையின் இறையாண்மை மீது விழுந்த அடியாக இந்திய - இலங்கை உடன்பாட்டை பார்க்கின்ற நிலை இன்றும் காணப்படுகிறது.

அந்த உடன்பாடு, இலங்கையை, பிற நாடுகள் இந்தியாவின் நலன்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதை தடை செய்கிறது. ஆனால், இலங்கை கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த வாக்குறுதியை காப்பாற்றிக் கொள்ளவில்லை என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டது, திருகோணமலை, சீனக்குடாவில், சீன நிறுவனத்துக்கு, விமான பராமரிப்பு நிலையத்தை அமைக்க இணங்கியது, துறைமுக நகரத்தை அமைக்கும் உடன்பாடு, கிழக்கு கொள்கலன் முனைய உடன்பாட்டை தடுத்தமை என்று இந்தியாவின் கேந்திர நலனைக் கவனத்தில் கொள்ளாமல் இலங்கை செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் இந்தியாவுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது.

சீன நீர்மூழ்கி கொழும்பில் தரித்துச் சென்றதும், தற்போது யுவான் வாங்-5 கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்துச் செல்ல அனுமதிக்கப்பட்டதும், கூட இந்தியாவை கடுமையாக எரிச்சலடைய வைத்த நிகழ்வுகள் தான்.

இந்தியப் பெருங்கடலை தனக்குரித்தான ஒன்றாகவே இந்தியா பார்த்து வந்திருக்கிறது. அதில் சீனாவுக்கு இடமளித்து, நெருக்கடியை உருவாக்கியது இலங்கை. என்ன தான் இலங்கை அவ்வாறு நடந்து கொண்டாலும் இந்தியா முரண்பாட்டை வெளிப்படையாக காண்பிப்பது குறைவு.

இராஜதந்திர முறையில் அழுத்தங்களைக் கொடுத்து தன் காரியத்தை சாதித்து வந்திருக்கிறது இந்தியா. எவ்வாறாயினும், இலங்கையில் இந்தியா சறுக்கிய அல்லது சீனா வெற்றி பெற்ற பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

2015இல் பதவிக்கு வந்தவுடன் இந்தியப் பிரதமர் மோடியின் வருகைக்கு முன்னதாக, சீனாவினால் கட்டப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நல்லாட்சி அரசாங்கம் இடைநிறுத்தியது. அது இந்தியாவை தன் வசப்படுத்த எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை. ஆனால், சீனாவின் அழுத்தங்களை அடுத்து அதனைச் சமாளிக்க முடியாமல் திணறிய நல்லாட்சி அரசாங்கம், துறைமுக நகரத் திட்டத்தை முன்னெடுக்க அனுமதி அளித்தது.

அதற்குப் பின்னர், இந்தியாவின் கருத்தைப் புறக்கணித்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமே, சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுத்தது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்பதை இந்தியா விரும்பவில்லை என்று கூறப்படுவதற்கு, அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்குக் கொடுக்கப்பட்ட விவகாரமே காரணம்.

அது போலவே, இப்போது, சீன ஆய்வுக் கப்பலை அனுமதிக்கும் விடயத்தில், இந்தியாவுக்கு முன்கூட்டியே தகவல் தெரியப்படுத்தப்படவில்லை. அதில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் உருவாக்கிய சிக்கல்களும் உள்ளன. சீனக் கப்பலின் வருகையை தாமதப்படுத்திய அரசாங்கம் அதனை தடுக்கவில்லை. அதற்குக் காரணம், துறைமுக நகர திட்டத்தை இடைநிறுத்தியதன் விளைவாக சீனா கொடுத்த நெருக்கடிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியும்.


அதனால் சீனக் கப்பலின் வருகையை தடுக்கின்ற திருப்பி அனுப்புகின்ற தைரியம் அரசாங்கத்துக்கு இல்லை.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு சீனாவின் உதவியும் ஒத்துழைப்பும் தேவை என்பதால், அதனை தடுத்து நிறுத்த முடியாது.

அதேவேளை இலங்கையின் இந்த இக்கட்டான நிலை, இந்தியாவுக்கும் தெரியும். அதனால் தான் துறைமுக நகர விவகாரத்திலும், அம்பாந்தோட்டை துறைமுக விவகாரத்திலும், இப்போதும் இந்தியா பொறுமையாக நடந்து கொள்ள முனைகிறது.

ஆனால், இந்தியாவின் நலன்களை இலங்கை பொதுவாக கவனத்தில் கொள்வதில்லை என்ற குறைபாடு, புதுடில்லியிடம் இருந்து வருகிறது. சீனா தொடர்பான விடயங்களில் மாத்திரமே இந்த முரண்பட்ட நிலை காணப்படுகிறது. சீனாவையும், இந்தியாவையும் சமநிலையில் வைத்துப் பார்க்க முனைகிறது இலங்கை.

ஆனால், இந்தியாவோ, சீனாவை பகையாகவும் இலங்கையை நட்பாகவும் பார்க்கிறது. இந்த நிலைமை தான், இரண்டு நாடுகளுக்கும் இடையில் அவ்வப்போது உரசல்கள் ஏற்படக் காரணம். இப்போது தோன்றியிருக்கும் இடைவெளிகளுக்கும் அதுவே காரணம்.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சீனாவின் ஆய்வுக் கப்பலும் இந்தியாவின் உளவு விமானமும் இலங்கை அரசியலில் முதலீட்டாக்குகிறார் ரணில்!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-K.T.கணேசலிங்கம்-



இலங்கை அரசியலின் போக்கு அதன் வெளியுறவுக் கொள்கையினால் கட்டமைக்கப்படுகிறது என்பது தனித்துவ



மானது. இலங்கை ஒரு தீவாகவும் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பதும் அதற்கான வலிமையாகும். சுதந்திர காலப் பகுதியை விட சமகாலப் பகுதி அதற்கான முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்துள்ளது. இலங்கையின் அயல் நாடான இந்தியா மட்டுமல்ல சீனா, அமெரிக்கா என்ற வரிசையில் வெளியுறவுக் கொள்கை அரசியல், பொருளாதார, இராணுவக் கட்டமைப்பை வடிவமைக்கின்றது. அதற்கான இராஜதந்திரத்தை வெளிப்படுத்தும் இலங்கையின் ஆட்சியாளர்களின் வரிசையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமானவராக விளங்குகிறார்.

உல களாவிய அரசியல் என்பது இராஜதந்திர அரசியல் என்பதில் மாற்றுசிந்தனை இல்லை என்பதே அரசியல் விஞ்ஞானமாகும். இக்கட்டுரையும் சீனக் கப்பலையும் இந்திய உளவு விமானத்தையும் ஒரே தளத்தில் கையாளும் இலங்கை ஆட்சியாளரின் அரசியல் தந்திரத்தை விளங்கிக் கொள்வதாகவுள்ளதுடன் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் வங்குரோத்து அரசியலையும் தேடுவதாக உள்ளது.

முதலில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா வழங்கிய டொனியர்-228 எனும் உளவு விமானத்தை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றிய விடயத்தை அவதானிப்போம். இலங்கையும் இந்தியாவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. இரண்டும் ஒரே குணாம்சங்களைக் கொண்ட நாடுகளாகும். இரு நாடுகளுக்கும் தனியான பயணம் கிடையாது. இந்திய-இலங்கை உறவு மாத்திரமன்றி பிராந்தியத்திற்கும் உலகத்திற்கும் பொதுவான பல பிரச்சினைகளை நாம் இனங் கண்டுள்ளோம். வரலாறு இலங்கையையும் இந்தியாவையும் ஒன்று சேர்த்துள்ளதால் எதிர்காலத்தில் ஒன்றாகப் பயணிக்க வேண்டும். பிராந்திய மற்றும் உலக நாடுகளின் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு இரு நாடுகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதியின் உரை, இந்தியாவை திருப்திப்படுத்துவதற்கானது என்று மட்டும் குறிப்பிட்டு விட்டு நகர முடியாது. இந்திய-இலங்கை உறவை நேர்த்தியாக கணிப்பிட்டு அதற்கான பதில் நகர்வுகளை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். சீனாவின் ஆய்வு மற்றும் உளவுக் கப்பல் வருகை தருவதற்கு ஒருநாள் இருக்கும் தறுவாயில், இந்தியா (15.08.2022) உளவு விமானத்தை இலங்கைக்கு கையபளித்துள்ளது. அதனை பெற்றுக் கொள்ளும் நிகழ்விலேயே இலங்கை ஜனாதிபதி மேற்கு றிப்பிட்ட உரையை ஆற்றியுள்ளார்.

அதாவது இந்தியாவை ,லங்கை மீறாதது மட்டுமல்ல ,ரு நாடுகளும் ஒன்றாகவே பயணிக்க வேண்டும் என்பதையும் அதில் இரு நாட்டுக்கும் முரண்பாடு கிடையாது என்பதையும் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது உரையின் முக்கியத்துவம் இந்தியாவின் வலுவை இலங்கைத்தீவு நன்கு உணர்ந்துள்ளது என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளதுடன், கடந்த காலத்தில் இலங்கையில் முன்னாள் ஆட்சியாளர் இந்தியாவுடனான முரண்பாட்டின் விளைவுகளை புரிந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இந்தியாவை மீறி இலங்கைத்தீவு செயல்படுவது ஆபத்தானது என்பதை ஜனாதிபதியின் உரை தெளிவு படுத்துகிறது. மறுபக்கத்தில் சீனாவின் கப்பல் தொடர்பில் அதீதமான உரையாடல் எதனையும் வெளியிடாத ஜனாதிபதி, சீனக் கப்பலை வரவேற்கக் கூட செல்லாத நிலையை விளங்கிக் கொள்வது அவசியமானது. இந்திய உளவு விமானத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை சீனக் கப்பலுக்கு ஜனாதிபதி வழங்கவில்லை என்பது வெளிப்படையான விடயமாகும்.

அதேநேரம் சீனக் கப்பலை வரவேற்கும் தரப்பாக அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் விமல் வீரவன்ச போன்றவர்களே காணப்பட்டனர், அவர்கள் பொதுஜன பெரமுனவின் பின்புலத்தைக் கொண்டவர்கள் என்பதுடன், தென்னிலங்கையில் தீவிரப் போக்குடைய தரப்புகளாகவும் இந்திய எதிர்ப்புவாதிகளாகவும் உள்ளனர் என்பது கவனத்திற்குரியதாகும். அவர்களே சீனக் கப்பலின் வருகையை முதன்மைப்படுத்தியுள்ளனர் என்ற தோற்றப்பாடு தரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இந்தியாவுடன் சீனக் கப்பல் விடயத்தினால் முரன்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதில் கவனம் கொண்டுள்ளார். மறுபக்கத்தில் சீனக் கப்பலின் இலங்கை வருகையை மௌனமாக ஏற்றுக் கொள்வதையும் அதன் மூலமான இந்திய-இலங்கை உறவு சார் அரசியலையும் தெளிவாக ஜனாதிபதி முன்னெடுக்க முயல்சின்றதை காண முடிகிறது.

இலங்கை அரசியல் முழுவதும் மிதவாதப் போக்குக்கும் தீவிரவாதப் போக்குக்கும் இடையிலான முரண்பாடாகவே நகர்ந்துள்ளது. அதனை பிராந்திய சர்வதேச அளவில் பிரயோகித்துக் கொண்டதில் இலங்கை ஆட்சியாளர்கள் முன்னோடிகளாக உள்ளனர். அதில் மிகச் சிறந்த தந்திரோபாயத்தை மேற்கொள்பவராக ஜனாதிபதி ரணில் விளங்குகிறார்.

இதேநேரம் ஜனாதிபதி சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவத் தேவைக்காக சீனா பயன்படுத்த இலங்கை அனுமதிக்காது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது இந்தோ - பசுபிக் பகுதியில் முக்கிய போக்குவரத்து மையமாக விளங்கும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் இராதுவத் தளமாக மாறக்கூடும் என இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகள் கவலை கொண்டுள்ளன. எனினும் தற்போது வந்துள்ள கப்பல் இராணுவப் பிரிவின் கீழ் வருகை தரவில்லை . ஓர் ஆராய்ச்சிக் கப்பலாகவே வருகை தந்துள்ளது. அதனால்தான் அதனை அனுமதித்தோம் எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி நேர்த்தியாக இந்தியா பக்கம் இருப்பதை முதன்மைப்படுத்த விளைகின்றார். இரண்டாவது. சீனக் கப்பல் இராணுவ நோக்கத்திற்கானது இல்லை என்பதை விட இராதுவப் பிரிவு சார்ந்தது இல்லை என்பதையும் முதன்மைப்படுத்த முனைகிறார். ஆனால் தகவலின் அடிப்படையில் சீனா இவ்வகை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் தளத்தில் 7 கப்பல்களை பயன்படுத்துவதாகவும் அதில் முதன்மையா எது யுவாள் வொங்-5 என்பதையும் உளவுத் தேவைகளையும் ஆய்வுகளையும் இலக்காகக் கொண்டது என்பதும் தெரிய வருகிறது. அது மட்டுமன்றி யுவாள் வொங்கின் வருகையை சீனா திட்டமிட்டபடி நகர்த்துவதில் கவனம் கொண்டிருந்ததையும் இந்து சமுத்திரத்தில் சுப்பலை அம்பாந்தோட்டையில் நிறுத்துவதென்பதையும் விடாப்பிடியான நகர்வுகளாலேயே வெற்றி கண்டுள்ளது. அதனை அவதானிக்கும் போது கப்பலின் நகர்வு எதிர்கால இராணுவத் தேவைக்கானதாக அமையும் என்பதையும் விளங்கிக் கொள்வது அவசியமானது. அது மட்டுமல்ல வரவேற்கச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தரப்பு விமானத்திற்குள் நுழைய மேற்கொண்ட முயற்சி தடுக்கப்பட்டதும் கவனிக்கப்பட வேண்டும். இவ்வாறு இலங்கை தரப்பு தந்திரோபாயமாக நகர்வதென்பது எதிர்காலத்தில் சீனாவின் போர்க் கப்பல்கள் வருகை தரவும் நீர் முழ்கிகள் நகரவும் வழிவகுக்கும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இந்து சமுத்திரம் சார்ந்து சீனாவின் நகர்வு அம்பாந்தோட்டையினால் வெற்றி கொள்ளப்பட அதிக வாய்ப்புள்ளது. இந்த சந்தர்ப்பத்தை தமிழ்த் தரப்பு கண்டு கொள்ளாதது மட்டுமல்ல சீனக் கப்பலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், அதன் அரசியல் நிறைவு பெற்றுவிட்டது. மாறாக இந்திய இலங்கைத் தரப்பினை கையாள்வதில் தமது பங்கினை முன் வைக்காதது மட்டுமல்ல சீனாவுடனும் உரையாடக் கூடிய வெளியை பயன்படுத்த தவறி விட்டது. இந்தியாவையும் சீனாவையும் ஒரே தளத்தில் கையாளும் வாய்ப்பு மட்டுமல்ல இந்தியாவின் பிடியை பலப்படுத்தும் விதத்தில் (22ம் பக்கம் பார்க்க)



# தி.மு.க.வைச் சீண்டும் பா.ஜ.க





இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின விழாவை நாடு முழுவதிலும் உள்ள மக்கள் மூன்று நாட்கள் தங்களது இல்லங்களில் தேசிய கொடியை ஏற்றி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். தமிழகத்தை பொறுத்தவரை முதல்வர ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்து, இந்தியாவில் சுதந்திர உணர்வு வேட்கையை முதலில் விதைத்தது தமிழகம் தான் எனபல ஆதார குறிப்புகளுடன் பேசினார்.

இது வழக்கம் போல் தேசபக்தி குறித்து பா.ஜ.க. முன்வைக்கும் 'இந்துத்துவா' சார்ந்த தலைவர்களுக்கு எதிரான விடயம் என்றாலும், பிஹார் அரசியலில் ஏற்பட்ட மாற்றத்திற்குப் பிறகு இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் ஒற்றை குரலில், பா.ஜ.க.விற்கு எதிரான விடயங்களை உரத்து பேசுவதன் முதற்கட்ட அறிகுறியாகவே பார்க்க வேண்டியுள்ளது.

தி.மு.க., பா.ஜ.க.விற்கு எதிரான அரசியலை இது போன்ற பொது நிகழ்வில் பேசுவது தற்போது அக்கட்சி பின்பற்றி வரும் உத்தியாகவுள்ளது. அதே தருணத்தில் பா.ஜ.க. தமிழகத்தில் காலூன்ற எதிர்மறையான விடயங்களை தொடர்ந்து கையிலெடுத்து வருகிறது.

கள்ளக்குறிச்சி மாணவி ஸ்ரீமதி மரணம் தொடர்பாக நடைபெற்ற வன்முறையின் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரின் பங்களிப்பு குறித்து இதுவரை காவல்துறை எந்தவித அறிக்கையும் வெளியிடவில்லை.

காஷ்மீரில் வீர மரணம் அடைந்த இலட்சுமணன் என்ற இராணுவ வீரரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியின் போது திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக, பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் அண்ணாமலை பங்கு பற்றியதும், இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் அவரை வாழ்த்தும் கோஷங்கள் பா.ஜ.க.வால் திட்டமிட்டு எழுப்பியதும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

துக்க வீட்டில் அரசியல் கட்சியின் ஆதரவு கோஷங்கள் எதற்கு? என்று கேட்ட மாநில நிதித்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் மீது பா.ஜ.க.வினர் காலணிகளை வீசியுள்ளனர். மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் பல்வேறு புள்ளி விவரங்களை தெரிவித்து விளக்கம் கேட்க, அதற்கு நேரடியாக பதிலளிக்காத அவர், ஆத்திரமடைந்து தி.மு.க. ஆட்சி குறித்து நாடாளுமன்றத்தில் பேசினார்.

அதேநேரம், பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் மீது ஏற்கனவே கோபத்தில் இருந்த பா.ஜ.க.வினர், இது தான் தருணம் என்று அவர் மீது காலணிகளை வீசி தாக்குதலை நடத்தினர். இதற்கு உடனடியாக எதிர்வினை ஆற்றாமல் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு காலணி வீசிய நபர்களை தமிழக காவல்துறையினர் கைது செய்திருக்கிறார்கள். பா.ஜ.க., தமிழகத்தில் வன்முறை, கலவரம் போன்றவற்றை உருவாக்கி, அதனூடாக ஆட்சி மீது மக்களிடத்தில் அதிருப்தியான எண்ணத்தை உருவாக்கி, உளவியல் ரீதியாக கவர்வதற்கு திட்டமிட்டு தயாராகி வருகிறார்கள். இதனை உளவுத்துறை மூலமாக கேட்டறிந்த முதல்வர் ஸ்டாலின், பா.ஜ.க.விற்கு எதிராக தீவிர எதிர்வினையை ஆற்றாமல், நிதானித்து நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றதாக கூறப்படுகின்றது. மேலும் தமிழகத்தில் கடலூர், மதுரை, தர்மபுரி, திருவாரூர், பொள்ளாச்சி என்று பல இடங்களில் பா.ஜ.க.வின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலரும் ஆதிக்க மனப்பான்மையில், அடாவடி அரசியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களின் நோக்கம் தமிழகத்தில் ஏதேனும் ஒரு வகையில் அரசியல் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கி, அதற்கு 'திராவிட முறைமையிலான' அரசை காரணமாக்கி, அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்பதாகும்.

ஆனால் பா.ஜ.க.வின் காலணி அரசியல், வெறுப்பு அரசியல் போன்றவற்றுக்கு அதற்கே உரிய பாணியில் முதல்வர் ஸ்டாலின் பதிலடி கொடுத்து வருவதாக தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள் தெரிவிக்கிறார்கள். இந்நிலையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக ஆளுநர் வழங்கிய தேநீர் விருந்தில் முதல்வர் ஸ்டாலின் மற்றும் அவரது அமைச்சரவையில் உள்ள சிலர் பங்கு பற்றியது அரசிகள் வட்டாரத்தில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதே தருணத்தில் இந்த தேநீர் விருந்தில் பன்னீர்செல்வம் அவருடைய ஆதரவாளர்களுடன் பங்கு பற்றியதும், எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது ஆதரவாளர்கள் யாரும் பங்குபற்றாததும் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

முதல்வரை பொறுத்தவரை மத்திய அரசுடன், மாநில மக்களின் நலங்களுக்காக மட்டுமே இணக்கத்துடன் பயணிக்க வேண்டும் என்ற தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதாகவும், பா.ஜ.க.வின் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு அவர் சரியான தருணத்தில் உரிய பதிலடியை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகன்றது.

ஜனவரி மாதம் நடைபெற்ற குடியரசு தின விழாவின் போது ஆளுநர் அளித்த விருந்தில் பங்குபற்றாத தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் அவரது அமைச்சர்கள், தற்போது ஆளுநர் அளித்த தேநீர் விருந்தில் பங்கு பற்றியிருப்பது தமிழக மக்கள் நலன் சார்ந்த அரசியல் நடவடிக்கை என்ற வாதங்களே அதிகமாகவுள்ளது.

குடியரசு தின விழாவின் போது வழங்கப்பட்ட தேநீர் விருந்தின் போது தி.மு.க. பங்கு பற்றாததற்கு, நீட் தேர்வில் தமிழகத்திற்கு விதிவிலக்கு வழங்க வேண்டும் என்ற மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு ஆளுநர் அனுப்பாதது ஒரு காரணமாக முன்வைக்கப்பட்டது.

அந்தத் தீர்மானம் தற்போது இந்திய குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டு விட்டதால் ஆளுநர் மீதான அதிருப்தி நீங்கியது. அதன் காரணமாகவே அவர் அளித்த சுதந்திர தின விழா தேநீர் விருந்தில் முதல்வர் பங்கு பற்றினார் என்று முதல்வரின் தரப்பில் அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது.

ஆனால் பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரை பொறுத்தவரை ஆளுநர் வழங்கிய தேநீர் விருந்தில் பன்னீர்செல்வம் மட்டும் பங்கு பற்றியதன் மூலம் மத்திய அரசு எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது தரப்பினருக்கு மறைமுகமாக ஒரு எச்சரிக்கையை வெளிப்படுத்தப் பட்டுள்ளமை புலனாகிறது.

அ.தி.மு.க. ஒன்றுபட வேண்டும், அ.தி.மு.க. ஒற்றைத் தலைமையில் இயங்குவதை விட, அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டும் என்றுதான் பா.ஜ.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதற்கு எதிராக எடப்பாடி பழனிச்சாமி செயற்பட்டு வருவதால், அவரை முடக்குவதற்கான அல்லது அவரை வழிக்குக் கொண்டு வருவதற்கான காரியங்களில் பா.ஜ.க.வின் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழக பா.ஜ.க. தலைவராக இருக்கும் அண்ணாமலை அக்கட்சியில் சேர்வதற்கு முன் ரஜினி அரசியல் இயக்கத்தை தொடங்கியிருந்தால், அதில் இணைவதற்கு ஆர்வமாக இருந்தவர் என்றும், அவர் கட்சி தொடங்காததால் வேறு வழியில்லாமல் பா.ஜ.க.வில் இணைந்ததாகவும், தகவல்கள் உள்ளன.

அதனால் விரைவில் அண்ணாமலை, அவரைச் சார்ந்த கட்சியினர் விரிக்கும் வலையிலேயே வீழ்ந்து அரசியல் ரீதியாக ஆதரவற்றவராக மாறக்கூடும் என்று தெரிவிப்பவர்களும் உண்டு. பா.ஜ.க. தொடர்ந்து தமிழகத்தில் வெற்றிகரமாக நடைபெற்று வரும் திராவிட முறைமை பாணியிலான அரசையும், அதன் தலைவரான ஸ்டாலினின் பொறுமையை சோதிக்கும் வகையிலும் தங்களுடைய நடவடிக்கையை அமைத்துக் கொண்டு தி.மு.க. அரசை தொடர்ந்து சீண்டும் என்பது மட்டும் உறுதியாக தெரிய வருகிறது.

இந்நிலையில் இதற்கு உரிய முறையில் பதிலளித்து வரும் தி.மு.க., எப்போதும் நிதானமான போக்கையே கடைப்பிடிக்கும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. அக்கட்சியின் தொண்டர்கள் ஆதங்கத்துடன் தலைமையிடம் தெரிவித்து வருகிறார்கள் என்பதும் மறுக்க இயலாத உண்மை. இதனால் இனி வரும் காலங்களில் பா.ஜ.க. தி.மு.க.வை தொடர்ந்து சீண்டும். ஆனால் அதற்கு தி.மு.க. உரிய முறையில் பதிலளிக்கிறதா? அல்லது தீவிரமான முறையில் எதிர்வினையாற்றுகிறதா? என்பதைப் பொறுத்தே தமிழகத்தின் அரசியல் நகரவுள்ளது.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
– குடந்தையான் –

## அளவெட்டி மக்கள் மன்றத்தின் அறிவித்தல்!

அளவெட்டி மக்கள் மன்றத்தின் கோடைகால ஒன்றுகூடல், நிர்வாகத் தெரிவு, விளையாட்டுப் போட்டி 2022 எதிர்வரும் 28 ஆகஸ்ட் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியில் இருந்து நடைபெறும்.

இடம்:- **Milikan Park**
**Seation "B"**
**5555 Steeles Ave East**


கூடிக் குலாவி விருந்துண்டு மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– நிர்வாக சபை –

# அமிர்தலிங்கம் என்ற அரசியல் சொத்து!

**அமரரின் 95ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**

மாலி



இலங்கையில் வாழ்கின்ற இரண்டு தேசிய இனங்களுமே ஒரே நதிமூலத்தையே கொண்டிருந்தாலும் அதாவது, இலங்கையின் ஆதி குடிகளான இயக்கர், நாகர், வேடர் என்ற இவர்களைத் தவிர்ந்த, சிங்களவர், தமிழர் என்ற இரு இனத்தவருமே இந்தியாவிலிருந்தே குடியேறியிருந்தபோதிலும், இலங்கையின் சரித்திரம் சிங்கள மக்களின் சரித்திரமாகவே எழுதப்பட்டது. மகாவம்சம்தான் இலங்கையின் 'பைபிள்'போலானது. சோல்பரி அரசியலமைப்பில் பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த வேளையில்தான் இலங்கையில் எழுதப்படாதுபோன இலங்கைத் தமிழர்களின் சரித்திரம்பற்றிய ஒரு விழிப்பு எழத் தொடங்கியது. அத்தோடு, தங்களுடைய வாழ்வுக் காலத்தில் தமிழ் இனத்தின் மொழி, பிரதேசம், சமூகம், கலாசாரம். கல்வி, பொருளாதாரம் சார்ந்த ஓர் அரசியல் விழிப்புணர்வும் அப்போதுதான் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டது் ஏற்படுத்தப்பட்டது. அது, தங்களின் உரிமைக்கான ஒரு விடுதலைப் போராட்டமாகவும் வரலாற்றில் ஒரு வடிவத்தை எழுதத் தொடங்கியது.

தங்களுடைய அரசியல் உரிமைகளுக்காக சாத்வீக வழியிலான சமஷ்டி கோரிக்கையுடன் ஆரம்பித்த இந்த விடுதலைப் போராட்டம், ஈற்றில் தங்களுக்கென்று ஒரு தனிநாடு கோரிக்கையுடன் ஆயுத போராட்டமாக மாறி, உலக அரங்கிலும் அறியப்பட்டது. ஆக, சுதந்திரத்துக்குப் பின்னரான இந்த விடுதலைப் பேராட்ட வரலாற்றுக் காலத்தில், இலங்கைத் தமிழ் இனத்துக்கு எக் காலத்துக்குமான ஓர் அரசியல் சொத்தாக தன்னை அளித்தவர் அமிர்தலிங்கம்.

என்னுடைய பத்திரிகை வாழ்வு - பத்திரிகை அனுபவம் ஐம்பது ஆண்டுகளை அண்மித்துவிட்டது. இந்த வாழ்வில், அமிர்தலிங்கம் என்ற இந்த மனிதரை நான் தெரிந்துகொண்டதை மேலானதாக சொல்வேன். அவரைத் தெரிந்துகொண்டமை என்று சொல்வது, அவருடனான பழக்கத்தை நான் சொல்லவில்லை. அவரி டம் பொதிந்திருந்த எத்தனையோ வகையான உன்னத மான ஆற்றல்களையும் பண்புகளையும் அவற்றின் தனித்துவத்தையும் நான் உன்னிப்பாக தெரிந்துகொண்டேன்.

இலங்கைத் தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன்தான் தொடங்குகிறது. இதை, அமிர்தலிங்கத்துடன் தொடங்கியது என்றும் சொல்லாம். முப்பது வருடங்கள் சாத்வீகவழியில் தீரங்களையும் தியாகங்களையும் நிறைத்த இப் போராட்டம், பின்னர் தீவிரவாத போக்கில் ஆயுத போராட்டமாக மாற்றம்பெற்றது. எஸ். ஜே. வி. செல்வநாயகமோ அல்லது ஜீ. ஜீ. பொன்னம்பலமோ சந்தித்திருக்காத மிகச் சிக்கலான ஒரு மாறுதல் காலத்து தலைவராக அமிர்தலிங்கம் விளங்கினார். அதுவும், முன்னரெப்போதும் இல்லாதவிதத்தில் அக்காலத்தில் பராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந்தார். அத்துடன், நாட்டைப் பிரிக்கும் தனிநாடு கோரிக்கையுடன் அவர் அப்போது பாராளுமன்றம் சென்றிருந்தார்.

இப்படி, ஓர் அசுர நெருக்குதலில் மார்தட்டி, சாதுரியத்துடன் நிமிர்ந்து நின்ற ஒரு பெரும் தலைவர் அமிர்தலிங்கம். தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதனையொத்த இயக்கங்ளையும் தடைசெய்வதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்ட எதிரியைப் போல, அத்தனை சட்டவாதிகளினதும் சரமாரியான கணைகளை எதிர்த்து, தன்னையும் அவர்களையும் (புலிகளையும்) காட்டிக்கொடாது, கத்திமேல் நடந்ததான அந்த பேச்சு, அந்த நிலைமாறுகால தலைவனை புடமிட்டு காண்பித்தது. இப்போதும் சொல்வேன், அமிர்தலிங்கத்தின் இந்த உரையைத் தெரிந்த எவராலும், அவருக்கு எதிராக துப்பாக்கி நீட்ட முடியாது.

துணிச்சலும், தீரமும், ஆளுமைகளும் மிக்க அரசியல்வாதியான அமிர்தலிங்கம், இலங்கையின் ஓர் உன்னத அரசியல் கனவானாக பரிணாமமானதை இக் காலப்பகுதியில் ஒரு பாராளுமன்ற நிருபராக அருகிருந்து நான் அவதானித்தேன் கண்டேன். அவரைநான் தெரிந்துகொண்டதாக சொல்வது இதைத்தான். பொதுவாக, எல்லா பாராளுமன்ற நிருபர்களுமே இதனைத் தங்களில் உணர்ந்தார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ் மக்களின் அரசியலுக்கு அவர் பயன்படுத்தும் சாதுரியத்தில் அரசாங்கம் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொணர்ந்தது. ஆனால், இலங்கையின் மிகச் சிறந்த எதிர்க் கட்சிகட்சித் தலைவர் ஒருவராகவே அனைத்து கட்சிகளும், பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த பிக்குகள் உள்பட்ட பெரும்பாலான சிங்கள மக்களும் அவரை மதித்தார்கள். உலக அரசியலில் சரித்திரமாகும் சிறிமாவோ பண்டாரநாயக்க, தன்னுடைய குடியுரிமையையும் இழந்து, அந்த பாராளுமன்ற சபையைவிட்டு வெளியேறுகையில் சொன்ன கடைசி வார்த்தை, 'கௌரவ எதிர்க்கட்சித் தலைவரையும் கௌரவ நல்லூர் உறுப்பினரையும் (மு. சிவசிதம்பரம்) என் உயிருள்ளவரை மறக்கமாட்டேன்', அவர் வார்த்தைகளால் மாத்திரம் இதைச் சொல்லவில்லை, அவர் கண்களில் அப்போது கண்ணீர் சொட்டியது.

ஐந்து நிமிஷமோ அல்லது ஐந்து மணித்தியாலங்களோ, தமிழோ அல்லது ஆங்கிலமோ, சந்தர்ப்பத்துக்கும் சபைக்கும் ஏற்ப பேசவல்ல மகா சமர்த்தர் அமிர்தலிங்கம். இலங்கையின் அரசியலமைப்பு 1978இல் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாற்றப்பட்டபோது, அந்த சட்டமூலம் மீதான விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றவில்லை. ஆனால், ஏன் தாங்கள் அதில் பங்குபற்றவில்லை என்பதை விளக்கி, அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் ஐந்து மணித்தியாலங்கள் உரையாற்றினார். அது, அப்போது அந்த பாராளுமன்றத்தில் பேசப்பட்ட மிக நீண்ட உரையாகவிருத்தது.
அமிர்தலிங்கத்தையடுத்து பிரேமதாச பேசினார். அவர்

## மந்திர உரை செய்த மாயம்

ஐந்தரை மணித்தியாலங்கள் பேசினார். அமிர்தலிங்கத்தின் பேச்சு சாதனையாகிவிடக்கூடாது என்பதற்காகவே பேசினார்.

ஆனால், அமிர்தலிங்கம் பேசி அமர்ந்தபோது, அப்போது சபாநாயகராகவிருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அக்கிராசனத்தில் இருந்தபடி, குறிப்பொன்றை பாராளுமன்ற செயலாளர்மூலம் அர்தலிங்கத்திடம் சேர்ப்பித்தார். அதனைப் படித்த அமிர்தலிங்கம், சபாநாயகரைப் பார்த்து தலையை அசைத்து, ஒரு புன்முறுவல் செய்தார்.

'இப்படி ஓர் அருமைவாய்ந்த உரைக்கு தலைமை தாங்க கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்' என்று சபாநாயகரின் அந்தக் குறிப்பு இருந்தது.

1977 பொதுத் தேர்தலில் இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்கவினுடைய ஆட்சி மாறி, ஜே. ஆர். ஜயவர்த்தன புதிய ஆட்சியை அமைத்தார். அதுபோலவே இந்தியாவில் இந்திரா காந்தியினுடைய ஆட்சி மாறி, மொரார்ஜி தேசாய் பிரதமரானார். இந்த ஆட்சி மாற்றத்தில் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் மொரார்ஜி தேசாயும் புதிய நண்பர்களானார்கள். இலங்கையில் தமிழர் அரசியல் நடவடிக்கைகளில் இளைஞர்களின் தீவிரவாதமும் தீவிரமாகிக்கொண்டிருந் தது. அரசுக்கு தலையிடியாகும் இந்த விவகாரத்தைத் தணிக்கும் ஒரு முயற்சியாக, பிரதமர் ஜயவர்த்தனவின் அழைப்பில் மொரார்ஜி தேசாய் இலங்கை வந்தார். அவ்வேளையில் அவருடன் பேச அமிர்தலிங்கத்தின் அலுவலகம் பலவாறாக முயன்றும் முடியவில்லை. எனினும், பாராளுமன்றத்தில் மொரார்ஜி தேசாய்க்கான வரவேற்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் அமிர்தலிங்கத்துக்கு ஐந்து நிமிடங்கள் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

பேச்சு முடிந்த பின்னர், மொரார்ஜி தேசாய் தரப்பிலிருந்து வந்த அழைப்பில், அமிர்தலிங்கம் சில சுற்றுக்கள் மோரார்ஜி தேசாயுடன் பேசினார். டெல்லி திரும்புமுன்னர், 'இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் பிரச்னை, அவர்களுக்கு கௌரவமான விதத்தில் தீர்க்கப்படவேண்டும்' என்று, பத்திரிகையாளர்களிடம் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டார். விமான நிலைய வழியனுப்பு வைபவத்தில், இந்தியா வர அமிர்தலிங்கத்துக்கு ஒரு விசேட அழைப்பையும் மொரார்ஜி தேசாய் விடுத்தார்.

பாராளுமன்ற வரவேற்பில், அந்த ஐந்து நிமிட மந்திர உரையின் மாயம் இது.

இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தீர்வில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் தேவையையும் சரியாக அதன் பரிமாணங்களோடு உணர்ந்தவர் அமிர்தலிங்கம். அதில் இந்திய தலைவர்களுடன் அவர் பேணிய உறவு ஒருபுறமிருக்க, இந்திய தலைவர்கள் இவரிடம் காண்பித்த மதிப்பும் அபிமானமும் கருத்தில் கொள்ள வேண்டியது. அதிலும், இந்திரா காந்தி ஓர் அரசியல் கனவானாகவே அவரை மதித்தார். அந்த மதிப்பில் அமிர்தலிங்கத்துக்கு இந்தியாவிலும் உலக நாடுகளிலும் அவசியமான ஆதரவுக்கு இந்திரா காந்தி பெரிதும் அநுசரணையாகவிருந்தார்.

டெல்லி ராஷ்டிரபதி பவனில், சுதந்திரதின இரவு விருந்துக்கு (1983) அமிர்தலிங்கத்தை அழைத்த பிரதமர் இந்திரா காந்தி, அவரை சில நிமிடங்கள் தாமதித்து வரச்சொன்னார். விருந்தினர்களுடன் நிறைந்திருந்த மண்டபத்தில் அமிர்தலிங்கம் பிரவேசித்தபோது, இந்திரா காந்தி எழுந்துவந்து அவரை வரவேற்றார். எல்லோர் கவனமும் அமிர்தலிங்கம்மீது திரும்பியது.

தேர்தலில் தோல்வியுற்ற கருணாநிதி, 1981 மதுரை ஐந்தாவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டை புறக்கணித்தார். கருணாநிதிக்கு ஆதரவானவர் என்ற எண்ணத்திலோ என்னவோ, மாநாட்டு தொடக்கநாளில் சம்பந்தமேயில்லாமல், அமிர்தலிங்கம்மீது சற்று காட்டமாகவே முதலமைச்சர் எம். ஜி. ஆர். பேசியமை, ஆறு தினங்களும் மாநாட்டு நிகழ்வுகளுடன் இணைந்த ஒரு பேசுபொருளாகவே தமிழ்நாடு முழுவதும் இருந்தது. ஏழாம் நாள் இறுதிநாள் நிகழ்வுகளில் பிரதமர் இந்திரா காந்தி கலந்துகொண்டார்.

அன்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்ட இந்திரா காந்தி, மேடைகளில் அருகிலிருந்த எம். ஜி. ஆர். பக்கம் திரும்பவில்லை. மாலை, குதிரைப்பத்தய திடலில் பிரமாண்டமான முடிவு வைபவம். அங்கும் மேடையில் அருகருகேதான் இருந்தார்கள். அமிர்தலிங்கம் அங்கு வரவும் இந்திரா காண்பித்த வாஞ்சையில் திகைத்துப்போன எம். ஜி. ஆர்., அமிர்தலிங்கத்தை ஆரத் தழுவினார்.

ஆக, இப்படி இந்தியாவுடன் - இந்திராவுடன் பேணிய - ஏற்படுத்திய நம்பிக்கையுடனான நட்பில் அமிர்தலிங்கம் ஈட்டிய சொத்து ஒன்றுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம். இதனை இலங்கைத் தமிழ் மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வாக எவருமே கொள்ளவில்லை - சொல்லவில்லை. ஆனால் அதே வேளை, இது மிக எளிதாக ஏற்பட்டுவிட்ட ஒன்றும் அல்ல. தெற்கு ஆசியாவின் கிழநரியான ஜே. ஆர்., 'இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னர், நான் தொடர்ந்து பதவியிலிருக்க எனக்கு பாதுகாப்பாக இருப்பீர்களா' என்று இந்தியாவைக் கேட்டுத்தான் ஒப்பமிட்டார்.

ஒப்பந்தத்தைப்பற்றிய வாத பிரதிவாதங்களுக்குள் இப்போது செல்லவில்லை. ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினம் அமிர்தலிங்கத்திடம் லண்டனிலிருந்து தொலைபேசியில் இந்திய அமைதிப்படை பற்றி கேட்டபோது. எந்த ஒரு நாட்டின் இராணுவமும் எக்காரணத்துக்காகவும் இன்னொரு நாட்டுக்குள் செல்வது பெரிதும் வரவேற்புக்குரியதல்ல. ஆனால், எங்களுடைய நிலைமையில் இந்திய இராணுவம் உடனடியாக வராவிட்டால், இங்கு பெரும் 'மசக்கர்' நடந்துவிடும் என்று சொன்னார்.

அமிர்தலிங்கத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் சில இரகசிய முன்னெடுப்புகள் நடைபெறுவதாகத்தான் அமிர்தலிங்கம் கொலைசெய்யப்பட்டார். அப்படியொரு முன்னெடுப்பு நிகழ்ந்திருந்தால், அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைவிட கூடுதலானதாக இருந்திருக்குமா அல்லது குறைந்ததாக இருந்திருக்குமா?

எப்படியிருந்தாலும், அது இப்போது முடிந்த கதை. அமிர்தலிங்கத்தின் வாழ்வும் அந்தக் கதையோடு முடிந்தது. ஆனால், அமிர்தலிங்கம் ஈழத் தமிழர்களின் அரசியல் சொத்து. அது, மறைக்கப்பட்ட ஒரு சொத்தாக இருப்பதுதான் நம்முடைய இனத்தின் அவலம்.

முப்பது ஆண்டுகள் சாத்வீக போராட்டமும் முப்பது ஆண்டுகள் ஆயுத போராட்டமுமாக இலங்கையில் தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் ஓய்ந்தபோது, மற்றொரு பத்தாண்டுகளை அதற்குப் பின்னர் தமிழர் அரசியலில் தலைப்பட்ட அரசியல்வாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர். நம்மிடமிருந்த - இருக்கின்ற சொத்துக்களை இவர்கள் தெரிந்திருக்கிறார்களோ என்னவோ ஆனால், நம்முடைய மக்களுக்கு ஓரளவுக்கு பயனாகவல்லதாக நம்மிடம் இப்போது இருப்பது அமிர்தலிங்கம் தேடிவைத்த இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான். அதனை நம்முடைய மக்களுக்கு பயனாக்குவதுதான் இந்த அரசியல் வாதிகள் இப்போது அவசியமாக செய்யவேண்டியதும் செய்யக்கூடியது மாகும். ●

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

**மேஷம்**

மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.

**ரிஷபம்**

ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.

**மிதுனம்**

மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.

**கடகம்**

கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

**சிம்மம்**

சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.

**கன்னி**

கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.

**துலாம்**

துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேத்திற்கான வழிகள் பிறக்கும். தொழில் - வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ்தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக்கிடையே சுமூகமான உறவு இருக்கும்.

**விருச்சிகம்**

விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.



**தனுசு**

தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்துவது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.

**மகரம்**

மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.

**கும்பம்**

கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி

**மீனம்**

மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## மக்களால் தெரிவான ஜனாதிபதியாக ரணில் வகுத்து வரும் உபாயங்கள்!

(9ம் பக்கத் தொடர்ச்சி) சட்டங்களையும் அவர் கடுமையாகப் பயன்படுத்தினார். மனித உரிமைகள் குறித்த கரிசனைகளை கவனத்திற ' கொள்வதாகச் சொல்லிக் கொண்டே அதற்கு எதிரான செயற் பாடுகளை முன்னெடுத்தார்.

இரண்டாவது: போராட்டம் தீவிர மடைவதற்கு காரணமாக இருந்தது அத்திய வசியப் பொருட்களுக்கான விலை உயர்வும், அவற்றுக்குக் காண ப்பட்ட தட்டுப்பாடும். இவை தான் மக்களை வீதியில் இறக்கியது. ரணில் அதிகாரத்துக்கு வந்த பின்னர் தட்டுப் பாடு பெருமளவு குறைந்திருக்கின் றது. விலைவாசியும் வீழ்ச்சியடைந் திருக்கின்றது. இந்த நிலையில் மக்கள் சீற்றமடைந்து வீதிகளில் இறங்குவதற் கான காரணங்கள் இல்லாமல் போயுள்ளன. அதனால் தான் ஓகஸ்ட் ஒன்ப தாம் தேதி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் படுதோல்வியல் முடிவடைந்தது. ரணிலின் செல்வாக்கை இது ஓரளவு அதிகரித்திருக்கின்றது.

அரசியல் ரீதியாக சர்வகட்சி அரசு என்பது இப்போது இல்லாமல் போயுள் ளது. தேசிய அரசை அமைக்கப் போவதாக ரணில் இப்போது சொல் கின்றார். இதனைப் பயன்படுத்தி அமைச்சர் பதவிகளை முன் வைத்து எதிரணியினரை பிளவுபடுத்தும் உபாயம் ஒன்றை ரணில் இப்போது முன்னெடுக்கின்றார்.

இதனால் எதிரணிகள் பலவீனப்பட வாய்ப்புள்ளது. இந்த நிலையில், அடுத்த வருடத்தில் அதாவது ஒரு வருடம் முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை மொட்டு அணியின் ஆதரவுடன் நடத்தினால், சஜித் தடுமாறுவார். ரணிலுக்கான வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கும். மேற்கு நாடுகளும் இதனை விரும்பலாம். இதற்கான உபாயம் ஒன்றை வகுத்து ரணில் விக்கிரமசிங்க இப்போது காய்களை நகர்த்திக் கொண்டு இருக்கின்றார்

## யாழ்ப்பாணத்திற்கு “ஹிந்தி” தேவையா! எதற்காக யாழ்.இந்துவைத் தெரிவு செய்தார்கள்?

8ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு நாட்டின் இறையாண்மையில், அந்தத் தேசத்துக்குரித்தான மக்களின் வாழ்வொழுங்கில் வெளிச்சக்திகள் மேற்கொள்ளும் அகபுற மாற்றங்கள் குறித்தெல்லாம் ஆய்வுகள் அவசியம். கண்காணிப்பு அவசியம்.

ஆனால் இலங்கையின் தேசியப் பாதுகாப்பென்பது, ஆட்சியாளர்களைப் பாதுகாப்பது, அவர்தம் ஊழல்களை மறைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது, தமிழ், முஸ்லிம் மக்களைக் கண்காணிப்பது என்றளவில் சுருங்கிக் கிடக்கிறது. எனவே இலங்கை வாழ் சமூகங்கள்தான் தன்னைச் சுற்றி நடக்கும் நன்மை தீமைகள் குறித்து அக்கறை கொள்ளல் வேண்டும்.

## சீனாவின் ஆய்வுக் கப்பலும் இந்தியாவின் உளவு விமானமும

(19ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை ஆட்சி யாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் சூழலையும் அதன் மூலமான தமிழ் அரசியல் வெளியை திறப்பதற்கான வாய்ப்பினையும் முன்கொண்டு செல்ல தவறி விட்டது. தற்போது இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது. இலங்கையில் நடப்பவை இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படும் எந்த வளர்ச்சியாக அமைந்தாலும் இந்தியா மிகக் கவனமாக அவதானிக்க வேண்டிய நிலையிலுள் ளது. எனினும் இந்தியா சீனாவிற்கான மற்றொரு மோதல் களமாக இந்து சமுத்திரம் மாறாது . இந்து சமுத்திரம் முக்கியத்துவம் பெறுவதால் பல நாடுகள் தங்கள் செல்வாக்கை விஸ்தரிப்பதற்காக இந்து சமுத்திர பகுதியில் தங்கள் செயல் பாடுகளை தீவிரப்படுத்துகின்றன.

இந்தியா தனது தேசிய நலனை பாதுகாக்க வேண்டும். ஆனால் இந்து சமுத்திரத்திற்கான உரிமை தனக்கு மட்டும் தான் என இந்தியா தெரிவிக்க முடியாது என்றார். இதனை தமிழ் தரப்பு அதிகம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவின் இந்து சமுத்திர நலனுக்காகவோ, இந்திய-சீன முரண்பாட்டுக்காகவோ ஈழத் தமிழரது அரசியலை இந்தியா கவனத்தில் கொள்ளாது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்தியாவுக்கான எல்லையை வெளியுறவு அமைச்சர் உறுதிப்படுத்தி விட்டார். இந்து சமுத்திரம் இந்தியாவுக்கு மட்டும் உரியதல்ல. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏன் உலகத்திலுள்ள நாடுகளுக்கு உரித்தானது என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். இது இந்தியாவின் பலவீனமா? அல்லது சீனாவின் பலமா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது.

எனவே இலங்கையின் ஜனாதிபதியின் உத்தி இரு நாடுகளையும் சமதளத்தில் கையாளும் வலிமையைக் கொண்டுள்ளார். இலங்கை முழுமையாக இந்தியா பக்கம் என்பது போல் காட்டப்பட்டாலும் சீனாவை கையாளும் தரத்திலேயே ரணில் விக்கிரமசிங்காவின் அணுகுமுறை உள்ளது. தமிழ்த் தரப்பு முழுமையாக இந்தியாவை கையாளத் தெரியாதுள்ளதுடன் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குட்படுத்தும் பிராந்திய அரசியலை கட்டமைத்துள்ளன.

அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 10வது ஆண்டு விழா
தமிழக - ஈழத்தமிழக பாடகர்களுடன்
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600




Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*






RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

அபாயம்
உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown[3]




iA Financial Group

AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

